



# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 12, இதழ் - 3 மே - ஜுன் 2026

R4904

## THE ISSUES OF LIFE
## ஜீவ ஊற்று

“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.” நீதிமொழிகள் 4:23

ஆதியிலே மனிதன் தேவனுடைய சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டான். மனிதனின் வீழ்கையின் பலனால் நமது இருதயம் அபூரணமாகவும் பாவம் செய்யக் கூடியதாகவும் ஆனது. தேவன் நமது இருதயத்தை அவருக்கு கொடுக்கவும் அவரை அன்பு செலுத்தவும் அழைக்கிறார். “என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.” (நீதிமொழிகள் 23:26) குமாரத்துவ உறவை திரும்ப பெற்றுக்கொள்ள ஒரு வழியை கொடுத்திருக்கிறார். அந்த வழி கர்த்தராகிய இயேசு. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நமது இருதயத்தை அவருக்கு கொடுத்த பிறகு, அப்போஸ்தலர் கூறுவது போல நாம் தேவனுடைய பிரியமான பிள்ளைகளாகிறோம். அடுத்த காரியம் நமது இருதயத்தில் விசுவாசத்தை வைத்து, தெய்வீக சித்தத்துக்கு நம்மை முழுமையாக கீழ்ப்படுத்துவது. இப்படியாக நமது இருதயத்தை வெளிப்படுத்துவது அவசியமாகிறது. நமது இருதயங்கள் தேவனுக்கு விசுவாசமாக இருந்தாலும் இன்னும் நாம் பாதகமான நிலைமைகளால் சூழப்பட்டிருக்கிறோம். உலகம், மாம்சம் மற்றும் சாத்தானால் நமது இருதயம் தாக்கப்படுகிறது. ஆகையால் அது தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுவதாவது: “இந்த பொக்கிஷத்தை மண் பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.” (2கொரிந்தியர் 4:7) நாம் இந்த பாதகமான போக்கு அல்லது நிலைமைகளை நாம் சமாளிக்க வேண்டும்.

தேவன் தம்முடைய ஜனங்களை மாம்சத்தின்படியோ அல்லது வாழ்க்கையின் செயல்களின்படியோ நியாயந்தீர்ப்பதில்லை. இவைகள் பூரணமற்றவைகள். ஆகையால் இருதயத்திலிருந்து புறப்படுகிறவைகளின் மேல் தீர்ப்பை வைக்கிறார். ஏனெனில் இருதயமே ஜீவனா, மரணமா என்பதற்கு பொறுப்பாக இருக்கிறது. ஊற்று சரியாக இருந்தால் பலன் நித்திய ஜீவன், ஊற்று தவறாக இருந்தால் பலன் ஜீவனுக்கு தகுதியற்றதாக, மரணமாக இருக்கும், ஜீவனா, மரணமா என்கிற நித்திய பலனை நமது நடத்தையின் ஊற்று முடிவு பண்ணுவதில்லை. மாறாக நமது இருதயத்தின் ஊற்றுகள் முடிவு செய்யும். அவை தற்கால வாழ்க்கையை மட்டும் பாதிப்பதில்லை. நாம் தொடர்பு கொண்டிருக்கிறவர்களின் சுத்திகரித்தலை அல்லது மெருகூட்டுதலையும் பாதிக்கும். நாம் ஜீவனை பெறுவோமா அல்லது பெறமாட்டோமா என்பதை தீர்மானிக்கும்.

இப்படியாக இருதயத்தின் ஊற்றுகள் தீர்மானிக்கும் பரீட்சையாக அமைகிறது. மரணமானது ஜீவனுக்கு எதிராக இருக்கிறது என்று அறிக்கை கூறவில்லை. ஆனால் கேள்வி என்னவென்றால், நாம் ஜீவனைப் பெறுவோமா? நாம் முன்னரே மரணத்தில் இருக்கிறோம். நியமிக்கப்பட்ட வழியாகிய மீட்பர் மூலம் மட்டுமே நாம் ஜீவனை பெற முடியும். நாம் ஜீவ ஊற்றை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய கிருபையாகிய நித்திய ஜீவனை பெற்றால், தவறான ஊற்றாகிய நித்திய மரணத்தை தவிர்ப்போம். நமது இருதயத்தின் ஊற்றினால் மட்டும் இந்த பிரச்சனை தீர்மானிக்கப்படவில்லை. இந்த யுகத்தில் ஜீவனின் நிலைமையை அடைகிறவர்கள், தெய்வீக சுபாவத்தின் மகிமையை அடைவார்கள் அல்லது “திரளான கூட்டத்தில்” அங்கமாவார்கள் என்பதும் உண்மையாக இருக்கிறது. அவர்கள் ராஜரீக ஆசாரியராவார்கள் அல்லது இந்த ஆசாரியர்களுக்கு ஊழியக்காரர்களாவார்கள். எனவே இருதயத்தின் ஊற்றுகளில் பெரிய காரியம் சார்ந்திருக்கிறது. ஆகையால் நாம் தேவனுடைய காரியங்களை, அங்கீகரிக்கப்பட்ட காரியங்களை விரும்ப வேண்டும். நாம் அடையக்கூடிய மிகச்சிறந்த பலனை அடையவும் கிறிஸ்து இயேசுவுக்குள் நமது அழைப்பின் பரிசை அடையவும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

### பாவத்தை நேசிக்கிற அனைத்தையும் நமது இருதயத்திலிருந்து வேரறுக்க வேண்டும்

பாவமானது அதன் பல்வேறு வடிவங்களில் தீமையாக இருக்கிறது என்பதை அங்கீகரித்தால் மட்டும் போதாது. அது தேவனால் தடை செய்யப்பட்டிருப்பதால் அதற்கு எதிராக போராட தீர்மானிக்க வேண்டும். அதோடு கூட தேவன் அங்கீகரிக்காத விருப்பத்தையும் ஆசையையும் இருதயத்திலிருந்து வேரறுக்க வேண்டும். ஓ, எப்படிப்பட்ட சுத்திகரிப்பு! இது இருதயத்திலும் வாழ்க்கையிலும் இருக்க வேண்டும். விசேஷமாக கிறிஸ்துவின் நாமத்தினால் பேரிடப்பட்டவர்களின் சிந்தையில் இருக்க வேண்டும். இதை கவனிக்க தவறுகிறவர்கள், தாங்கள் தொடர்ந்து சோதனைகளால் சூழப்பட்டிருப்பதை காண்கிறார்கள். ஏனெனில் அவர்கள் வெளியரங்கமாக கடுமையான ஒழுக்கக்கேடுகளை தவிர்க்கும் போது, அவை தடை செய்யப்படாவிட்டால், அவைகளை வேண்டும் என்று விரும்பி

கண்டனம் செய்யப்பட்டவைகளுக்கு ரகசியமான அனுதாபம் காட்டுகிறார்கள். இந்த காரியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் நமது சொந்த அனுபவங்களில், பாவத்தின் ஆரம்பம், இருதயத்தின் மனதில் ஏற்பட்ட இரகசியமான தவறுகள் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கிற சத்தியத்தை நாம் அதிகமாக நம்புவோம். "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்" என்கிற நமது தலைப்பு வசனத்தை நாம் பாராட்டுவோம்.

நமது மனதில் வரக்கூடிய தூண்டுதல்களை அனுமதிக்கும்படியும் தூண்டுதல்கள் வராதபடி நாம் ஜெபிக்கும்படியும் நம்மை தேவன் அமைந்திருப்பதில் நாம் ஆச்சரியப்படக்கூடாது; ஏனெனில் இப்படிப்பட்ட தூண்டுதல்கள் இல்லையென்றால் நமது பங்கில் வெற்றி என்று எதுவும் இருக்காது. பாவத்தையும் பொல்லாங்கனையும் வெற்றி கொள்ளுதல் இருக்காது. இதற்காகவே நாம் இப்பொழுது கிறிஸ்துவின் பள்ளியில் இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். அங்கே நாம் எல்லா தூண்டுதல்களிலுமிருந்தும் காக்கப்படுவோம் என்பதல்ல. ஆனால் சோதனைகளை சந்திப்பது எப்படி என்பதை அங்கே நமது மாபெரும் போதகர் மூலம் நாம் கற்றுக்கொள்வோம். நமது ஆண்டவரின் கிருபை மற்றும் உதவியினால் ஜெயங்கொள்ளுகிறவர்களாக பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெற்றவர்களாக வெளியே வருவோம். இந்த போராட்டத்தில் நமது வெற்றியின் அளவு மாபெரும் போதகரில் நமது விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் ஆர்வத்தை பொருத்து இருக்கும், அவரது ஞானத்தில் நமக்கு நம்பிக்கை இருந்தால் அவரது அறிவுறுத்தல்களை மிகவும் நெருக்கமாக பின்பற்றி, நமது இருதயங்களையும் மனங்களையும் எல்லா காவலோடும் காத்துக்கொள்வோம். கர்த்தரிடம் முற்றிலும் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருப்பதற்கு அவரது ஞானத்திலும் ஏற்ற சமயத்தில் அவரது உதவியிலும் விசுவாசம் தேவையாக இருக்கிறது. ஆகையால் இவ்விதமாக எழுதப்பட்டிருக்கிறது. "நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." அதாவது, விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி, அதிலிருந்து வருகிற கீழ்ப்படிதல் மூலமே அது இருக்கும். நம்மை நேசித்து நமக்காக தம்மை கொடுத்தவர் மூலமே ஜெயங்கொண்டவர்களாகவும் "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும்" வெளியே வர நம்மை சாத்தியப்படுத்தும்.(யோவான் 5:4; ரோமர் 8:37)

வெகு முன்னதாகவே தெய்வீக உதவியை நாம் தேடக்கூடாது. அதாவது உதாரணத்திற்கு வரக்கூடிய வருட முழுவதும் அல்லது வரக்கூடிய மாதம் முழுவதும் அல்லது வரக்கூடிய வாரம் முழுவதும் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அதைக்காட்டிலும், நாம் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியதிலிருந்து அவருடையவர்களாக இருந்தால், அவர் எல்லா சோதனைகளிலும் எல்லா தூண்டுதல்களிலும், எல்லா நேரங்களிலும் அவர் நம் அருகே இருக்கிறார் என்பதை அறிய வேண்டும். மேலும் அவரது அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்தால் அவரது உதவி நமது பயன்பாட்டுக்கு தயாராக இருக்கும். தேவையான சமயத்தில் உதவிக்காக அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும். அத்துடன் பொதுவான ஜெபம் அனுதினமும் கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்காகவும் கவனிப்பிற்காகவும் இருக்க வேண்டும்.

பெரிய போராட்டங்களை தவிர்த்து, தங்களது மனங்களை சுத்திகரிக்கப்பட்டவைகளாக வைத்துக் கொள்வதைக் காட்டிலும் அநேகர் பெரிய போராட்டங்களை எதிர்பார்க்கிறார்கள். எண்ணிக்கையில் அதிகமாக இருக்கக்கூடிய சிறிய போராட்டங்கள் நாம் ஜெயங்கொண்டு நாம் வெகுமதிகளை பெறக்கூடியவைகளாக இருக்கின்றன. "பட்டணத்தை பிடிக்கிறவனைக் காட்டிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." (நீதிமொழிகள் 16:32)

கடைசியாக கர்த்தருடைய இந்த ஆலோசனைக்கு கீழ்ப்படிதலுக்கான மாபெரும் பலன், எல்லா முயற்சியோடும் தங்கள் இருதயங்களை விசுவாசத்தோடு காக்கிறவர்களின் மாபெரும் சாதனை, சங்கீதக்காரனின் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.... என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக." (சங்கீதம் 19:12,14)

R4905

# QUESTIONS ON OUR LORD'S LIFE - RIGHTS
# நமது ஆண்டவரின் ஜீவிய உரிமைகளைப் பற்றிய கேள்விகள்

**கேள்வி :** நமது கர்த்தர் மனிதனாக ஆவதற்கு முன்பு, ஆவியின் ஜீவியாக இருந்த போது அவர் பெற்றிருந்த உரிமைகள் என்ன? அவர் ஒரு மனிதனான போது அந்த ஜீவிய உரிமைகளுக்கு என்ன ஆனது.?

**பதில் :** ஐசுவரியவானாயிருந்த நமது கர்த்தர் நம் நிமித்தம் தரித்திரரானார். (2 கொரிந்தியர் 8:9) பரலோக உரிமைகளையும் பூரணத்தையும் பரிமாற்றம் செய்து பூமிக்குரிய உரிமைகளையும் பூரணத்தையும் பெற்றுக்கொண்டார். அந்த பரிமாற்றம் என்பது ஒரு பலியல்ல. ஏனெனில் மனிதனாகிய இயேசுவே ஒரு மீட்கும் பொருளானார். அவர் மானிடனாவதற்கு முன்பு இருந்த உரிமைகளை அவர் பலி கொடுத்தார் என்று வேத வாக்கியங்களில் எங்கேயும் இல்லை. எனினும் "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு இவைகளை விட்டுவிட்டார்." (எபிரேயர்: 12:2)

மனிதனுக்கு தேவையான உரிமைகள் பூமிக்குரிய உரிமைகளும் மானிட உரிமைகளும் ஆகும். இயேசு இந்த பூமிக்குரிய உரிமைகளை தமது ஜீவனை பலியாகக் கொடுத்து மீட்டுக் கொள்ளுகிறார். அவர் ஒரு ஆவியின் ஜீவியாக, ஆவியின் ஜீவியின் உரிமைகளை பலி கொடுத்திருக்க முடியாது. ஏனெனில் ஆவியின் ஜீவிகள் யாருக்கும் மரண தண்டனை கொடுக்கப்படவில்லை. ஆதாம் மனிதனாக இருந்து மீட்கப்பட வேண்டியவராக இருந்தார். "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின்

உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரிந்தியர் 15:21,22)

**மீட்கும் பொருள் கல்வாரியில் கொடுக்கப்பட்டது**

**கேள்வி :** நமது கர்த்தர் கல்வாரியில் எதைக் கொடுத்தார்?

**பதில் :** நாம் காண்பித்திருக்கிறது போல கர்த்தர் தமது ஜீவனை கொடுத்து மனுக்குலத்தை மீட்கவில்லை. ஆனால் தேவனுடைய ஏற்ற காலத்தில் மற்றும் ஒழுங்கில் மனுக்குலத்தை விடுவிப்பதற்கான மீட்கும் விலைக்கிரயத்தை அது கொடுத்தது. "அவர் தம்மை ஒரு **antilutron** ஆக (ஒரு சரிசமமான விலைக்கியரத்தை) கொடுத்தார்." (1 தீமோத்தேயு 2:5,6)

நமது கர்த்தரின் பலி, அவர் தமது ஜீவனை மரணத்துக்கு கொடுத்தது தெய்வீக பார்வையில் மிகவும் சிறப்பானதாக மெச்சத்தகுந்ததாக இருந்தது. அவர் பிதாவானவரால் உயர்ந்த தளத்தில் புதிய ஜீவன் வெகுமதியாக அளிக்கப்பட்டார். அவரது புதிய ஜீவன் யோர்தானில் ஆரம்பித்து அவரது உயிர்த்தெழுதலில் நிறைவடைந்தது. இந்த பூமிக்குரிய ஜீவிய உரிமை பாவத்தினால் பறிக்கப்படாமல் இன்னும் நமது கர்த்தருக்கு உரியதாக இருக்கிறது. இந்த பூமிக்குரிய ஜீவிய உரிமையை ஒரு மனிதனின் பாவத்திற்கு ஈடு செய்ய நீதியினிடத்தில் கொடுக்க நோக்கங்கொண்டார். ஒரு மாம்சீக ஆத்துமாவை மரணத்திற்கு கொடுத்தார். ஒரு ஆவிக்குரிய ஆத்துமா அவருக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டது. ஆதாமுக்கும் அவரது இனத்திற்கும், அவர்களுக்காக புது உடன்படிக்கையை முத்திரையிட்டு, உரியதாக்க அவரது மாம்சீக ஆத்துமாவை இன்னும் அவர் பெற்றிருக்கிறார்.

**புண்ணியமும் ஜீவிய உரிமையும்**

**கேள்வி :** உலகத்தின் பாவத்திற்காக கிறிஸ்து கொடுக்கும் புண்ணியத்தையும் உலகத்தின் பாவத்திற்காக அவர் கொடுக்கும் ஜீவிய உரிமைகளையும் எப்படி நாம் வேறுபடுத்துவது?

**பதில் :** நமது கர்த்தர் மனிதனாக இருந்த போது மானிட தளத்தின் நீதி நிச்சயமாக அவருக்குரியதாக இருந்தது. இப்பொழுது மனிதனாக அவர் நீதியை பெற்றிருக்கவில்லை. அந்த நீதி, பிதாவானவரின் பார்வையில், நீதியின் பார்வையில் கர்த்தரின் கணக்கில் இருக்கிறது. அது புண்ணியமாக அமைந்து ஏற்ற காலத்தில் உலகிற்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அது சுவிசேஷ யுகத்தில் சபைக்கு சாட்டப்படுகிறது.

இயேசு பெற்றிருந்த மானிட ஜீவிய உரிமை அவர் மரிக்கும் வரை அவரிடமிருந்தது. மரிக்கும் போது, பிதாவானவரின் ஏற்பாட்டின்படி, பிதாவானவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கூறியதாவது: "பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணாதிருப்பேனோ?" (யோவான் 18:11) மனிதனாக இருந்த போது அந்த ஜீவிய உரிமைகள் அவரது பயன்பாட்டில் இருந்தது. அவைகள் இப்பொழுது அவருக்கு தேவை இல்லை. ஏனெனில் அவர் இன்னும் மேலான உரிமைகளை பெற்றிருக்கிறார். ஆனால் அவர் மானிட ஜீவியத்திற்கு உரிமையை பெற்றிருக்கிறார். அவரது சொந்த பயன்பாட்டுக்கு தேவையில்லாமல் இருக்கிறது. ஆனால் அது உலக மனுக்குலத்திற்கு கொடுப்பதற்கு தேவைப்படுகிறது. அதன் மூலம் விரும்புகிறவர்கள் நித்திய ஜீவனை பெறுவார்கள்.

கர்த்தர் அவரது சொந்த தனித்தன்மையின் நிலைப்பாட்டில் பார்க்கப்பட வேண்டும். முதலாவதாக அவர் ஒரு ஆவியின் ஜீவியாக இருந்தார். இரண்டாவதாக அவர் பரிசுத்தமும், குற்றமில்லாமலும், மாசில்லாமலும் பாவிகளுக்கு விலகின மாம்ச ஜீவியாக்கப்பட்டார். மூன்றாவதாக அவர் தம்முடைய பூமிக்குரிய ஜீவனை தம்மிடமிருந்து எடுக்க அனுமதித்ததால், தேவன் அவருக்கு வெகுமதி அளித்து உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தினார். (பிலிப்பியர் 2:9)

இந்த மகிமையான ஆளுமை உலக மனுக்குலத்திற்காக சில காரியங்களை செய்யும்படி தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த காரியங்களை செய்வதற்கு சக்தி, இப்பொழுது அவருக்கு தேவையில்லாமலும் இன்னும் அவர் பெற்றிருக்கிற பூமிக்குரிய உரிமையில் இருக்கிறது. அதை அவர் ஆயிரம் வருட யுகத்தில் உலகத்திற்கு கொடுப்பதற்காக வைத்திருக்கிறார். அவர்கள் படிப்படியாக புது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணக்கத்திற்கு வருவார்கள். இப்பொழுது அவரது அங்கங்களாக விரும்புகிறவர்களுக்கு, அவர்களது மீறுதல்களை மூடவும் அவர்களது பலிகள் பிதாவானவருக்கு பிரியமானதாக ஆக்கப்படவும் அதை சாட்டுதல் பண்ணுகிறார்,

பிதாவின் சித்தத்தை செய்வதில் கிறிஸ்துவின் புண்ணியம் இருந்தது. திரைக்கக்கப்பால் இந்த புதிய சுபாவம் தேவன் கொடுத்த வெகுமதி. நிச்சயமாக அந்த புண்ணியம் இன்னும் நிலைத்திருக்கிறது. கிறிஸ்து மனுக்குலத்திற்கு என்ன செய்வார் என்பதை குறித்து பொருட்படுத்தாமல், தேவனுடைய பார்வையில், ஒரு சொந்த புண்ணியத்தை அவர் எப்பொழுதும் பெற்றிருப்பார். ஆகையால் அவர் தனது புண்ணியத்தை விட்டுக்கொடுப்பார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. அப்படியிருந்தால் அவர் அந்த புண்ணியம் இல்லாமல் விடப்பட்டிருப்பார். ஆனால் அவர் தமது பரிசை பெற்றுக்கொண்டு, மானிட ஜீவிய உரிமையையும் பெற்றிருக்கிறார். அது தேவனால் இப்படியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அது தேவனுடைய பார்வையில் ஒரு புண்ணியத்தின் காரியத்தை அமைத்திருக்கிறது. சொல்லப் போனால் ஆதாமையும் அவருடைய பிள்ளைகளையும் மீட்கக்கூடிய அவரது விலைக்கிரயம் அதில் அமைந்திருக்கிறது. அதை அவர் சீக்கிரத்தில் உலகிற்கு பயன்படுத்துவார். அவர் இப்பொழுது இதை நமக்கு சாட்டிக் கொண்டிருக்கிறார்.

**கிறிஸ்துவின் புண்ணியத்தை சாட்டுதல்**

**கேள்வி :** "கிறிஸ்துவின் சாட்டப்பட்ட புண்ணியம்" என்றால் என்ன?

**பதில் :** கிறிஸ்துவின் சாட்டப்பட்ட புண்ணியத்தைப் பற்றி பேசும் போது, அவர் எப்பொழுதும் விட்டுவிடாத ஒரு தனிப்பட்ட புண்ணியத்தை, சொந்த ஒரு நீதியை அவர் பெற்றிருக்கிறார் என்பதை நாம் மனதில் தெளிவாக வைத்திருக்க வேண்டும். தமது சொந்த நீதி அவருக்கு தேவை. இந்த பொருளில் நீதியை இழக்காமல் அவரது நீதியை நமக்கு கொடுத்திருக்க முடியாது. அவரது ஜீவிய உரிமையிலும் இதுவே உண்மையாக இருக்கும். அவர் ஒரு ஜீவிய உரிமையை பெற்றிருக்கிறார். அந்த ஜீவிய உரிமையை அவர் நமக்கு சாட்டவில்லை. ஏனெனில் அது அவருக்கே தேவை. அவரது தனிப்பட்ட புண்ணியம் அவருக்கு தேவை.

ஒரு ஜீவிய உரிமையையும் நீதியையும் முறையே ஆயிரம் வருட யுகத்தில் மனுக்குலத்திற்கு கொடுப்பார் மற்றும் சபைக்கு சுவிசேஷ யுகத்தில் சாட்டுவார் என்றும் எந்த பொருளில் நாம் சொல்லுகிறோம்? இந்த வழியில், மனுக்குலத்திற்கு அவர் தமது மானிட ஜீவிய உரிமையை புண்ணியத்தைக் கொடுப்பார். அது அவருடையதாக, மனிதன் கிறிஸ்து இயேசுவின் கீழ்ப்படிதலுக்காக கொடுக்கப்பட்ட்ட வெகுமதியாக இருந்தது. அதாவது மானிட ஜீவியாக ஜீவிப்பதற்கான சலுகை அல்லது உரிமை. அந்த உரிமை நியாயப்பிரமாணத்துக்கும் கீழ்ப்படிந்ததால் உறுதி பண்ணப்பட்ட உரிமை. (ரோமர் 10:5; கலாத்தியர் 3:12) இப்பொழுது அவர் தெய்வீக சுபாவத்தின் பங்குதாரராக உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார். இனி அவருக்கு மானிட ஜீவனுக்குரிய உரிமை மற்றும் அந்த உரிமையுடன் செல்லக்கூடிய நீதியும் தேவைப்படாது. அவர் தற்கால நிலைமையில் முற்றிலும் திருப்தியடைந்தவராக நிறைவானவராக இருக்கிறார். மானிட ஜீவனுக்கான உரிமையையும் அதனுடன் செல்லக்கூடிய நீதியையும் பூமிக்குரிய பலியின் புண்ணியத்தை அவர் உலகிற்கு விரைவில் கொடுக்க வேண்டும். இதில் தற்காலத்தில் அவர் சபைக்கு அவர்களது அபூரணம் நிறைவாகும் அளவுக்கு தருகிறார். நாம் அவரில் நிறைவடைகிறோம். அதனால் நமது பலிகள் அவர் மூலம் தேவனுக்கு பிரியமானதாகவும் புனிதமானதாகவும் கருதப்படுகிறது.

### உண்மையிலேயே பலிக்கு ஜீவிய உரிமை இல்லை

**கேள்வி :** உதவி ஆசாரியர்கள் பூமிக்குரிய ஜீவிய உரிமைகளை பலி செலுத்துகிறார்களா?

**பதில் :** பூரணர்களுக்கே நித்திய ஜீவனை கொடுக்க தேவன் நோக்கங்கொண்டிருக்கிறார். மேலும் ஆதாமின் சந்ததியாகிய நாம் அனைவரும் அபூரணமாக இருக்கிறோம். ஆகையால் நாம் பலியிடுவதற்கு ஜீவிய உரிமைகளை பெற்றிருக்கவில்லை. ஆனால் இயேசு நமது பரிகாரியாக பிரசன்னமாகி, நாம் அவரது அடிச்சுவட்டை பின்பற்ற விரும்பினால் நமக்கு உதவி செய்ய நோக்கங்கொண்டிருக்கிறார். இப்படியாக நாம் அவரது பலியில் பங்குதாரராகி, பிறகு அவரது ராஜ்யத்தின் மகிமையில் பங்கு பெறுவோம்.

இதை செய்ய நமக்கு சாத்தியமாகும்படி, நமது சகல மீறுதல்கள் மற்றும் குறைபாடுகளை ஈடுகட்டும்படி அவரது புண்ணியத்தை நமக்கு சாட்டுதல் பண்ண நோக்கங்கொண்டிருக்கிறார். ஆனால் நமது கர்த்தரால் நமக்கு சாட்டுதல் பண்ணப்பட்ட இந்த புண்ணியத்தை நாம் அர்ப்பணிப்பதில்லை. நமது பரிகாரி நமது குறைவுகளை நிறைவு செய்ய நமது முழு பங்கு விசுவாசமே. அபூரணமாயிருப்பதை அவர் சரிபண்ணுகிறார். பிறகு நம்மை பலியாக ஒப்புக்கொடுக்கிறார். பிதாவானவர் அந்த பலியை ஏற்றுக் கொள்ளுகிறார். மெய்யாகவே பலி கொடுப்பதற்கு நாம் ஜீவிய உரிமையை பெற்றிருந்ததில்லை.

### சாட்டப்பட்ட புண்ணியத்தை தோல்வியானது விடுவிக்கிறது

**கேள்வி :** ஒருவன் முற்றிலுமாக தோல்வியடைந்து இரண்டாம் மரணத்தில் மரித்தால், சாட்டப்பட்ட புண்ணியம் விடுவிக்கப்படுவது தோல்வி தீர்மானிக்கப்படும் போதா அல்லது உண்மையில் மரிக்கும் போதா?

**பதில் :** கிறிஸ்து மூலமாக பிதாவினிடத்தில் வருகிறவர்களுக்கு கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுகிறது. கிறிஸ்துவின் இந்த பூமிக்குரிய புண்ணியத்தை நிராகரிக்கிறவர்கள், அவர்கள் நிராகரித்த கணத்திலிருந்து அவர்களிடம் இருப்பதில்லை. கர்த்தரை அவர்கள் நிராகரித்த கணத்திலிருந்து அது இருப்பதில்லை. அவர்கள் பெற்றிருந்த புண்ணியம் அனைத்தும் விடுவிக்கப்படுகிறது, பறிமுதல் செய்யப்படுகிறது, சென்று விடுகிறது. அந்த கணமே அவர்கள் மரிக்க வேண்டும் என்று அதற்கு பொருளல்ல. ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறார்கள். அதாவது இரக்கத்திலிருந்தும் நீதிக்குள்ளிருந்தும் வெளியேறுகிறார்கள். பூரணமில்லாமல் ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாகவும் நீதிக்கு முன்பாகவும் யாரும் நிற்க முடியாது என்பதை நாம் அறிவோம். மீட்கும் பொருளை நிராகரிக்கிறவர்கள் பாவ உணர்வில் இனி இல்லாதவர்களாக காணப்படுகிறார்ககள். இது "கல்யாண வஸ்திரத்தை" நீக்கிப்போடுகிற உவமையில் விளக்கப்படுகிறது. நிராகரித்த அந்த கணத்திலிருந்து எந்த விதத்திலும் இனி அது அவனுடையதல்ல.

### ஜீவிய உரிமைகள் புது உடன்படிக்கையில் குறிப்பிடப்படுகிறது

**கேள்வி :** நமது ஆயிரம் வருட யுகத்தில் இயேசு கல்வாரியில் கொடுத்த ஜீவிய உரிமைகள் எங்கே இருக்கும்.?

**பதில் :** மகா இரட்சகரின் ஜீவிய உரிமைகளை பற்றி பேசுகிறோமே, அது பாவ நிவாரண பலியின் இரத்தத்தினால் நிழலாக காண்பிக்கப்படுகிறது. நிழலின்படி, இந்த மெய்யான பாவ நிவாரண நாளின் முடிவில், பாவ நிவாரணத்தின் இரத்தம் உலக ஜனங்களினிமித்தம் நீதிக்கு செலுத்தப்படுகிறது. அது அவர்களின் சார்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்காக." (எபிரேயர் 2:17) ஜனங்கள் அவர்களது மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட உடனேயே அவர்கள் ஆசீர்வாதங்களை பெற ஆரம்பிக்கும் நிலைமையில் இருப்பார்கள். ஆனால் அதற்கு முன்பு அல்ல. மகா பிரதான ஆசாரியர், நமது கர்த்தர், சுவிசேஷ யுக முடிவில், தேவனுக்கும் ஆபிரகாமின் சந்ததியாகிய மாம்சீக இஸ்ரயேலுக்கும் இடையே ஒரு புது உடன்படிக்கையை பாவ

நிவாரண இரத்தத்தினால் முத்திரையிட்டு பொறுப்பேற்றுக் கொள்ளுவார். மேலும் அவர் “அவரது சரீரமாகிய சபையுடன்” அந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நிற்பார். அந்த பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மத்தியஸ்தர் இந்த அனைத்து வருடங்களில் நிறைவேற்றுவார்; அது திரும்பப் பெறும் சலுகைகளை அவர்கள் பெறுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறது. இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டால் அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

அந்த நேரத்தில் மானிட ஜீவியத்தின் உரிமை, இரட்சகராக நமது கர்த்தரின் கைகளிலிருந்து செல்லும். அப்போதிலிருந்து உடன்படிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளபடி, மனிதன் பெற்றிருக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிற அனைத்து காரியங்களையும் உத்திரவாதம் அளிக்கிறது. மனுக்குலத்தின் கல்லான இருதயம் சதையான இருதயத்துக்கு இடம் கொடுக்கும். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாழ்கிற அனைவரும் நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆயிரம் வருட யுகத்தில் புது உடன்படிக்கை நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஜீவிய உரிமைகளை பிரதிநிதித்துவப்படுத்தும். பிரமாணத்தை கடைபிடிக்க தவறுபவர்கள் தண்டனைகளைப் பெறுவார்கள். இந்த ஏற்பாட்டில், இயேசு, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக ஆயிரம் வருடங்களாக ஆசீர்வாதங்களை வழங்குவார். சுவிசேஷ யுகத்தில் ஜீவனுக்கான உரிமையை அவரது சொந்த கட்டுப்பாட்டில் உலகத்தின் பாவங்களுக்காக, உலகத்தின் மீட்புக்காக நீதியிடம் கொடுப்பதற்கு வைத்திருந்தார். இந்த யுக முடிவில் அந்த உரிமையை அவர் கொடுத்தவுடன் மேலே சொல்லப்பட்ட பிரகாரம், நீதியானது அதை கொடுக்க, மனுக்குலம் அதைப் பெற்றுக்கொள்ளும்.

R4909

# “YOU HAVE NEED OF PATIENCE”

# “பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது”

“நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.” யாக்கோபு 1:4

முற்றிலும் வேறுபட்ட இரண்டு கிரேக்க வார்த்தைகள் ஆங்கில வேதாகமத்தில் பொறுமை என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இவைகளில் ஒன்று பொறுமை என்று பொதுவாக பொருள் தரக்கூடிய வார்த்தை. இதை நாம் அனுதின வாழ்க்கையில் சகிப்புத்தன்மை அல்லது நீடிய பொறுமை என்ற பொருளில் பயன்படுத்துகிறோம். உண்மையில் இந்த கிரேக்க வார்த்தை பொதுவாக நீடிய பொறுமை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது நமது வசனத்தில் கவனிக்க ஆவலாயிருக்கும் இன்னொரு வார்த்தையாக இருக்கிறது. அது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் பொறுமை என்று பெரும்பாலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த வார்த்தை பொறுமை என்கிற வார்த்தையை விட மிகவும் ஆழமானதாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அது தீமையை சந்தோஷமாக, நம்பிக்கையுடன் விருப்பத்துடன் பொறுமையாக சகிப்பதை குறிக்கிறது. ஆகையால் அது தற்காலிக உணர்வை அல்லது செயலை குறிப்பிடாமல் குணலட்சணத்தின் ஒரு அம்சத்தைக் குறிக்கிறது. அது இருதய மற்றும் குணலட்சணத்தின் அபிவிருத்தியைக் குறிக்கிறது. இது தவறை அல்லது மனநிறைவுடன் கூடிய துன்பத்தை சித்தத்திற்கு விரோதமில்லாமல், தெய்வீக ஞானம் மற்றும் அன்புக்கு முழுமையான இணக்கத்துடன் சகித்தலை குறிக்கிறது. தெய்வீக ஞானமும் அன்பும் தற்காலத்தில் தீமையை அனுமதித்தாலும் அதை தேவனுடைய ஏற்ற காலத்தில் நீக்குவார் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

இந்த பொறுமை என்கிற கிருபை மற்ற ஒவ்வொரு கிறிஸ்தவ கிருபைக்கும் வழியை மென்மையாக்குகிறது. ஏனெனில் அனைவரும் பொறுமையிலும் தொடர்ச்சியான சுய ஒழுங்கின் கீழும் பழக்கப்பட வேண்டும். பொறுமை என்கிற இந்த கிருபை இல்லாமல் ஒரு அடிகூட முன்னேற முடியாது. கிருபைகளில் ஒன்றாகிய அது கிறிஸ்தவனுடைய குணலட்சணத்தை அலங்கரிக்கிறது அல்லது உலக அங்கீகாரத்தை ஜெயங்கொள்ளுகிறது அல்லது தேவனை மகிமைப்படுத்துகிறது. அவரது சத்தியம் நம்மை ஊக்குவிக்கிறது. அது சாந்தத்தை நீடிக்க செய்கிறது. மானிட பலவீனத்தை தடுக்க முயற்சிக்கிறது. தெய்வீக சாயலை அடைவதற்கு மிகுந்த சிரத்தையுடன் முயற்சிக்கிறது. அது கோபங்கொள்ள தாமதிக்கிறது. கருணையில் நிறைந்திருக்கிறது அது நீதியின் பாதைகளை கண்டுகொள்ள தீவிரிக்கிறது. அவைகளில் உடனடியாக நடக்கிறது. அது தனது சொந்த பலவீனங்களை கவனிக்கிறது. மற்றவர்களது பலவீனங்களையும் குறைவுகளையும் அனுதாபத்துடன் பார்க்கிறது.

அப்போஸ்தலர் பவுல் இந்த வார்த்தையை பயன்படுத்துவதினால் கிறிஸ்தவ குணலட்சணத்தில் சகிப்புத் தன்மையின் முக்கியத்துவம் முழுவதுமாக வெளிப்படுத்தப்படுகிறது. ஏனெனில் அவர் பொறுமையை அநேக தடவை அன்புக்கு மேலாக வைக்கிறார். “பந்தய பொருளை” அடைய நாம் ஓட வேண்டிய குணலட்சண இலக்காக இந்த அன்பு இருக்கிறது. அப்போஸ்தலர் தீத்துவுக்கு எழுதும் போது (தீத்து 2:2) முன்னேறிய கிறிஸ்தவனின் குணலட்சணமாக பின்வரும் வரிசைப்படி கூறுகிறார். ஜாக்கிரதை, நல்லொழுக்கம், தெளிந்த புத்தி, விசுவாசத்திலும், அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியம். எல்லா குணலட்சணங்களும் நம்மிடம் இருந்தாலும் இறுதியான சோதனையாகிய பொறுமை, உற்சாகமான சகிப்புத்தன்மை முதலானவைகளில் வெற்றி பெற வேண்டும். அதன் பிறகே தெரிந்துகொள்ளப்பட்ட கர்த்தரின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

மறுபடியும் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது அவர் (2 தீமோத்தேயு 3:10) பொறுமையுடன் சகித்தல் என்கிற இந்த குணலட்சணத்தை அன்புக்கு பின்னாக வைக்கிறார். அவர் கூறுவதாவது: "நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்."

### "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சோதிக்கிறார்"

"அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கிறது" மற்றும் "பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்கு அன்பு குறியீடாக" இருக்கும் போது எப்படி பொறுமையானது அன்புக்கு மேலாக தரவரிசையில் இருக்கக்கூடும்? பொறுமையுடன் சகித்தல் என்பது நமது ஓட்டத்தின் முடிவில் மாத்திரம் வராமல் நமது ஓட்டம் முழுவதும் தேவைப்படுகிறது என்று பதிலளிக்கிறோம். கிறிஸ்தவ பாதையில் ஆரம்ப சோதனைகளுக்கு இந்த பொறுமையுடன் சகித்தல் நமக்கு தேவைப்படுகிறது. உற்சாகமாக சகிக்கும் ஆவி நமது பிரயாணத்தின் ஒவ்வொரு படியிலும் மேலும் வலுவாக வளர வேண்டும். சிலர் சில நாட்கள் அல்லது சில மாதங்கள் அல்லது சில வருடங்கள் இருக்கலாம். எனினும் கிறிஸ்துவுடன் மாபெரும் ராஜ்யத்தின் ஆசீர்வாதத்துக்கு தகுதியில்லாது இருப்பார்கள்.

விதைக்கிறவன் உவமையில் கர்த்தர் இந்த உண்மையை விளக்குகிறார். சில விதைகள் கற்பாறையின் மேல் விழுந்து முளைக்கிறது. ஆனால் சோதனை என்னும் சுட்டெரிக்கும் வெப்பம் வந்தவுடன் அந்த துளிர் கருகிப்போய் விடுகிறது. ராஜ்ய வகுப்பாரின் அங்கங்களை தெரிவு செய்யும் போது மண்ணின் ஆழத்தை, குணலட்சண ஆழத்தை, சகிக்கக்கூடிய பொறுமையின் இருதயத்தை கர்த்தர் தேடுகிறார். இந்த ஒரு குணலட்சணத்தில் குறைவுபடுகிறவன் ராஜ்யத்திற்கு தகுதியுடையவனாக ஆகமாட்டான். எந்த தளத்தில் இருக்கிற ஜீவராசிக்கும் இந்த பொறுமை அவசியமாக இருக்கிறது. கிறிஸ்தவனுக்கு ஆரம்பத்திலிருந்தே இந்த குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைவது அவசியமாயிருக்கிறது. அது நமது முதலாவது சுற்றிலும், இரண்டாவது சுற்றிலும் மூன்றாவது சுற்றிலும், பரிபூரண அன்பு என்கிற பந்தயப்பொருளின் இலக்கின் நான்காவது சுற்றிலும் நமக்கு தேவைப்படுகிறது.

நமது நண்பர்களை மாத்திரமல்ல, நமது சத்துருக்களையும் நேசிக்கிற பந்தயத்தின் இலக்கை நாம் அடையும் போது நம்மேல் வருவது சரியானது என்று கர்த்தர் காண்கிற சோதனைகளை உற்சாகத்துடனும், விசுவாசத்துடனும், பொறுமையுடனும் சகித்து அந்த இலக்கில் நிற்பது நமக்கு அவசியமாக இருக்கிறது. தேவன் தமது ஜனங்களை சோதனைக்கு நீடிய சோதனைக்கு மாதக்கணக்காக, வருட கணக்காக கீழ்ப்படுத்துகிறார். "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை சோதிக்கிறார்." (உபாகமம் 13:3)

எனவே அப்போஸ்தலர் பவுல் நமக்கு உபதேசிப்பதாவது: "சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நில்லுங்கள்." "இலக்கை" அடைந்து பொறுமையுடன் சகித்தல் "அவனது பரிபூரண கிரியை பெற்றிருப்பதாக" அல்லது "அவனது கிரியை பரிபூரணப்படுத்துவதாக." பொறுமையுடன் சகித்தல் என்பது பந்தயத்தின் பரிசை பெறுவதற்கான அன்பின் குணலட்சணங்களை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதை மாத்திரமல்ல, எதிர்ப்பை உற்சாகத்துடன் சகிக்கக்கூடிய ஆழமான, மாறாத அன்பின் மூலக்கூறை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்பதையும் மெய்ப்பிக்கட்டும்.

நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து (உங்கள் சித்தத்தை தெய்வீக சித்தத்துக்கு முழுமையாக கீழ்ப்படுத்திய பிறகு) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும்படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது என்று பரிசுத்த பவுல் நமக்கு சொல்லுகிறார். (எபிரேயர் 10:36) அனைத்தையும் நாமே செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட வேலை நமக்கு இருக்கிறது என்பது அப்போஸ்தலரின் எண்ணத்தில் இருப்பதாக தெரிகிறது. "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்." (பிலிப்பியர் 2:12,13) இந்த வேலையில் ஒத்துழைக்க, தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நமது இருதயத்தில் உண்டாகும், எந்தவிதமான எதிர்ப்பும் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். கொல்லப்பட வேண்டும் என்பதை நாம் உறுதி செய்வோமாக. நமது சித்தத்தை முற்றிலுமாக தெய்வீக சித்தத்திற்கு கீழாக முழுமையாக கொண்டு வரவேண்டும். அதன்மூலம் அவரது சித்தத்தை தவிர வேறு எதையும் நாம் பெற்றிருக்கக்கூடாது. இந்த அளவுக்கு நாம் ஜெயங்கொண்ட பிறகு, பொறுமை நமக்கு தேவையாயிருக்கிறது. நாம் அர்ப்பணித்திருக்கிறபடியால் கர்த்தர் நம்மை சும்மா ஏற்றுக்கொள்ளமாட்டார். அர்ப்பணத்தை நாம் நிரூபிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆரம்பத்தில் நமது அர்ப்பணத்தை ஏற்றுக்கொள்கிறார். அதன்பிறகு நாம் உண்மையில் எந்த அளவுக்கு அவரை நேசிக்கிறோம் என்று சோதிக்கிறார்.

### கனி கொடுக்க பொறுமை அவசியம்

பொறுமையுடன் சகித்தல் என்பது வேத வாக்கியங்களில் கர்த்தரின் வார்த்தையாக அல்லது போதனையாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நமது கர்த்தர் கூறுகிறதாவது: "என் பொறுமையைக் குறித்து சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால் நான் உன்னைக் காப்பேன்." (வெளிப்படுத்தல் 3:10) பொறுமை என்கிற இந்த குணத்தின் முக்கியத்துவத்தை நமது கர்த்தர் சீஷர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததை நாம் சுவிசேஷத்திலும் இரண்டு முறை கவனிக்கிறோம். ஒரு முறை விதைக்கிறவன் உவமையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (லூக்கா 8:11-15) அவர் கூறுகிறதாவது: "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்து பொறுமையுடன் (தொடர்ந்து) பலன் கொடுக்கிறார்கள்." கர்த்தர் தமது ராஜ்யத்தில் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுகிற கனி கொடுக்கிற வகுப்பாராக இருப்பதற்கு, நாம் சந்தோஷத்துடன் அவரது வசனத்தின் சாட்சியை பெற்றுக்கொண்டாலும் அதைக் காட்டிலும் அதிகமாக செய்வது அவசியமாக இருக்கிறது என்பதே இதன் கருத்தாக இருக்கிறது. உவமையில் கற்பாறையில் விழுந்ததாக குறிப்பிடப்படுகிற வகுப்பார் முதலில் மகா விசுவாசத்தை நிரூபிக்கிறார்கள். ஆனால் துன்பமாகிய சூரியன் வந்த போது கருகிப்போகிறார்கள். ஏனெனில் ஆழமான மண் இல்லை. கற்பாறையில் இந்த வகுப்பாரைக்

குறித்து நமது கர்த்தர் விளக்குவதாவது: இவர்கள் சத்தியத்தை கேட்டு மிகவும் சந்தோஷப்படுகிற வகுப்பாராக இருக்கிறார்கள். ஆனால் பொறுமையுடன் சகிப்பதில்லை. அவர்கள் எதிர்ப்பையோ அல்லது துன்பத்தையோ தாங்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உதிர்ந்து ஊக்கம் இல்லாதவர்களாக ஆகிறார்கள். அவர்கள் ஜெயங்கொண்டவர்களாகவும் ராஜ்ய வகுப்பாராகவும் ஆகமாட்டார்கள்.

இந்த உவமையில் விதையை பெற்றுக்கொள்ள தயாரான பிறகு, விதையை ஏற்றுக்கொண்டு முளைத்த பிறகு, அன்பு, நம்பிக்கை, சந்தோஷம் மற்றும் விசுவாசம் ஆகியவை அதை வளர்த்து கனி கொடுத்த பிறகு கடைசி சோதனை பொறுமையுடன் சகித்தல், ஒரே சீரான தன்மை என்று கர்த்தர் நமக்கு காண்பிக்கிறார். விதையானது வளர்ந்து, முதிர்ந்து, களஞ்சியத்தில் சேர்க்கப்படுவதற்கு பொறுமையானது தேவைப்படுகிறது. கர்த்தருடைய வசனத்தின் வெளிச்சத்தில் பொறுமையுடன் சகித்தல், உற்சாகத்துடன் சகித்தல் எவ்வளவு முக்கியமானதாக தெரிகிறது! இருதயத்தின் நோக்கங்களையும் எண்ணங்களையும் மதிப்பிடுகிறவர், அவரது பிள்ளைகள் அவரினிமித்தம் சகித்தால், பொறுமையின்றி, சந்தோஷமற்ற சிந்தையுடன் சகித்தால் அவர்களுடன் சந்தோஷப்படுவார் என்று நாம் நினைக்க முடியாது. அவர்கள் தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாக இருக்க மாட்டார்கள். அவரது மனோபாவம் குறித்து வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: “என் தேவனே, உமக்கு பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.”

இன்னொரு சமயத்தில் நமது கர்த்தர் தமது சீஷர்களிடம், அவரது சீஷர்களாக இருப்பதினால் அவர்கள் எதிர்ப்பையும், சோதனைகளையும், உபத்திரவங்களையும் எதிர்பார்க்க வேண்டும் என்று கூறினார். உபத்திரவம் என்ற வார்த்தையின் ஆரம்பத்தை அறிந்து கொண்டால் அந்த வார்த்தையின் அர்த்தத்தின் வலிமையை சிலர் ஒரு வேளை உணரக்கூடும். அது ட்ரிபுலம் (Tribulam) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது. அது ஒரு உருளையின் பெயர். பழங்காலத்தில் கோதுமையை அடித்து சுத்தப்படுத்தி உமியை பிரிக்கும் இயந்திரத்தின் பெயர். வேதத்தில் கோதுமையினால் அடையாளப்படுத்தப்பட்ட அர்ப்பணம் செய்த கர்த்தரின் பிள்ளைகளுக்கு இந்த வார்த்தையை பயன்படுத்தியது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! நமது புது சிருஷ்டி உமி நீக்கப்பட்ட உண்மையான தானியமாக இருக்கிறது. எனினும் இந்த பொக்கிஷம் பூமிக்குரிய நிலைமைகளாகிய உமியால் மூடப்பட்டிருக்கிறது. கோதுமையானது “களஞ்சியத்தில்” போடவும் பயன்படுத்தவும் தயார்படுத்தப்படுவதற்கு ஒவ்வொரு தானியமும் அந்த குணங்களை நீக்க உபத்திரவத்தை கடந்து வருவது அவசியமாயிருக்கிறது. அந்த குணங்கள் நீக்கப்படவில்லை என்றால், கர்த்தரால் நாம் அழைக்கப்பட்டிருக்கிற எதிர்கால ஊழியத்திற்கு தகுதியற்றவர்களாக இருப்போம்.

நாம் நமது அபூரணத்தை உணரக்கூடிய அளவுக்கு தக்கதாகவும் நம்மைக் குறித்த தேவனுடைய சித்தத்தின் படியும், ஆண்டவர் நமக்கு தருவது நல்லது எனக்கண்ட சகல உபத்திரவங்களை பொறுமையுடன் சகிப்பவர்களாக, இன்னும் ஒருவகையான சந்தோஷத்துடனும் ஏற்றுக் கொள்பவர்களாகவும் நாம் இருக்கக்கூடும். அவரது சீஷர்கள் தற்கால யுகத்தில் வாழும் வரை, பாவம் இருக்கும் வரை, சாத்தான் இந்த உலகத்தின் அதிபதியாக இருக்கும்வரை, பல்வேறு வகைகளில் வரக்கூடிய உபத்திரவங்களை எதிர்பார்க்க வேண்டும் என்று நமது கர்த்தர் அவர்களுக்கு விளக்குகிறார். துன்பங்கள் அனுமதிக்கப்பட்டு அது அவர்களை அடைந்து அவர்களை பாதித்தாலும் அவர்கள் முழுமையாக தெய்வீக அரவணைப்பு மற்றும் பாதுகாப்பின் கீழ் இருப்பார்கள் என்கிற உறுதிமொழியை அவர்களுக்கு கொடுத்தார். பின் தொடர்கிற வார்த்தைகளாவன: “உங்கள் பொறுமையினால் (நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் பொறுமையுடன் சகிப்பதினால்) உங்கள் ஆத்துமாக்களை காத்துக்கொள்ளுங்கள்.” (லூக்கா. 21:19)

### “ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான்”

“நாம் கர்த்தரில் பலப்படுவதும்” கர்த்தராகிய இயேசுவின் குணலட்சணத்தை பெறுவதும் உறுதியை மாத்திரம் அல்ல, சாந்தம் போன்ற குணங்களை அடைவதுமே பொறுமையுடன் சகித்தலின் சோதனையின் ஒரு நோக்கமாக இருக்கிறது. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணின வாக்குத்தத்தங்களை நாம் பெறுவதற்கு முன்னர் இவைகளெல்லாம் அபிவிருத்தி பண்ணப்பட வேண்டும். (1 கொரிந்தியர் 2:9,10) இவைகள் எல்லாம் ஆவிக்குரியவைகள். அவைகளை மனதிலே உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் புரிந்துகொள்ள முடியாது. நாம் கர்த்தரின் சாயலில் இருக்க வேண்டும் என்கிற வாக்குத்தத்தமானது, முதலாம் உயிர்தெழுதலில் நாம் அடையப்போகிற ஆவிக்குரிய, பரலோக நிலைமைகளை மாத்திரம் உள்ளடக்காமல், உலகத்தை உயர்த்துகிற ஆசீர்வாதத்தில் பங்கு பெறுகிறதையும் உள்ளடக்கியிருக்கிறது. “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.” (கலாத்தியர் 3:29) கிறிஸ்துவினுடையவர்கள் என்பது அவரை ஏற்றுக்கொண்டு, அவருடன் இணைந்து அவரது தரநிலைக்கு சேர்வது மாத்திரமல்ல. அதோடு கூட நாம் நல்ல போர் வீரர்களாக இருக்க வேண்டும் என்பதையும் குறிக்கிறது. நல்ல போர்வீரர்களாக இல்லாதவர்கள் கிறிஸ்துவின சரீர அங்கங்களாவதற்கு பாத்திரராயும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜெயங்கொண்டவர்களாயும் “முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும்” ஆக முடியாது. (ரோமர் 8:37)

நாம் முன்னரே “வாக்குத்தத்தத்தை” பெற்றிருக்கிறோம். ஆனால் அது இன்னும் நிறைவேறாமல் இருக்கிறபடியால் அது இன்னும் பெறப்படாமல் இருக்கிறது. வாக்குத்தத்தம் ஒரு நிபந்தனையுடனானது. “இவைகளை செய்கிற மனுஷன் இவைகளாலே பிழைப்பான்.” (லேவியராகமம் 18;5; ரோமர் 10:5) நமது கர்த்தரின் ஏற்பாட்டில் வாக்குத்தத்தத்தின் நிபந்தனை என்னவென்றால் நாம் அவருடைய அன்பிலும் கிருபையிலும் நிலைத்திருக்க வேண்டும் என்பதேயாகும். கிறிஸ்துவின் மரணத்தை ஏற்றுக்கொண்டு அவரில் நம்பிக்கை வைத்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடந்து, தெய்வீக பிரமாணங்களை கடைபிடிக்க

நாடுகிறவர்கள் "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு" சுவிசேஷ யுகத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுவார்கள். சுவிசேஷ யுகத்தின் அனைத்து வாக்குத்தத்தங்களும் "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கே" கொடுக்கப்படுகின்றன. அப்படிப்பட்டவர்கள் சிங்காசனத்தின் மேல் உட்காருவார்கள். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாவார்கள். அவர்கள் இரட்சகருடன் உடன் சுதந்தரர்களாக இருந்து மாபெரும் மேசியாவின் வேலையில் பங்கு பெற்று இஸ்ரயேலை ஆசீர்வதித்து, இஸ்யேலர்கள் மூலமாக உலக மனுக்குலத்தை ஆசீர்வதிப்பார்கள்.

சபையானது இப்பொழுது விசுவாசத்தினால் நிபந்தனையுடனான வாக்குத்தத்தத்தை அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறது. அது அவர்களது முடிவு பரியந்தமுமான விசுவாசத்தையும் அவர்களது பொறுமையுடன் சகித்தலையும் சார்ந்துள்ளது. அப்படிப்பட்ட ராஜரீகமானவர்கள் வாக்குத்தத்தத்தை பெற்று ராஜ்யத்தில் உடன் சுதந்தரராவார்கள். மற்ற அனைவரும் அதன் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படுவார்கள். "என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளை கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார்." (யோவான். 15:2) நாம் பரீட்சையில் இருக்கிறோம். இந்த பரீட்சை நமது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும். இந்த பரீட்சையின் காலம் திருப்திகரமாக இருந்தால் அங்கத்துவம் நிரந்தரமாக்கப்படும். இந்த நிபந்தனைகளின்படி நடக்க தவறுபவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாவதற்கோ ராஜ்யத்தில் உடன் சுதந்தரராவதற்கோ பாத்திரமாக எண்ணப்பட மாட்டார்கள்.

**நாம் அவரது அன்பில் நிலைத்திருப்போமாக**

இந்த குணலட்ண சாயலை அடைவது என்பது வாழ்க்கை முழுவதுக்குமான வேலை என்பதை உணராமல், ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தரின் சாயலாகும் முக்கியத்துவத்தை யார் கவனிக்கக்கூடும்? இது ஒரு நாளிலோ அல்லது ஒரு வருடத்திலோ நிறைவேற்றப்பட முடியாது; ஆனால் முழு வாழ்க்கையும் அதற்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும். நாம் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நாளுக்கு நாள் கிருபையில் வளர்வதையும் கிறிஸ்தவ குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைவதையும் நாம் உணரலாம். நாம் சத்தியத்தை அறிந்தால் மட்டும் போதாது அல்லது நீதியை பற்றிக்கொண்டிருப்பதில் மனநிறைவு அடைந்தால் போதாது. சத்தியமானது குணலட்சணத்தில் அதன் முறையான மற்றும் திட்டமிட்டபடி குணலட்சணத்தில் விளைவை ஏற்படுத்துவதை நாம் காண வேண்டும். நல்ல மற்றும் நேர்மையான இருதயங்களில் சத்தியம் பெற்றுக்கொள்ளப்பட்டால், "நாம் தோல்விடையவதில்லை" என்கிற அப்போஸ்தலர் பேதுருவின் உறுதிமொழியை பெற்றிருக்கிறோம். ஆனால் ஏற்ற காலத்தில் நாம் ராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

நாம் முன்னரே விசுவாசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய அறிவுறுத்தல்களையும் உணர்வுகளையும் நம் மனதில் எப்பொழுதும் புதியதாய் வைத்திருக்க வேண்டியதின் அவசியத்தை நாம் காண்கிறோம். விசுவாசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது என்பது ஒன்று. கிறிஸ்தவ குணலட்சணத்திலும் மற்றும் அனைத்து ஆவியின் கிருபைகளிலும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது என்பது இன்னொன்று.

அன்பானவர்களே, சுவிசேஷத்தில் "நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே (உற்சாகத்துடன், பொறுமையுடன் சகித்து) ஓடக்கடவோம்." (எபிரேயர் 12:1) முன்னரே கவனித்தபடி பந்தயமானது இந்த நிலைத்தன்மையுடன் "இலக்கை" அடைய ஓட வேண்டும். இலக்கை அடைந்த பிறகு, நிலையான கிருபை, பொறுமையுடன் சகித்தல் ஆகியவைகளால் மட்டுமே, சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கிற நமது நிலைமையை பராமரிக்க முடியும்.

R4911

# A GREAT REFORMER
# ஒரு மகா சீர்திருத்தவாதி

எஸ்றா 8; 15-36

"எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறது."

ஒரு மாபெரும் சீர்திருத்த இயக்கத்தை தலைமை தாங்கி வழிநடத்தியவர் எஸ்றா என்ற ஒரு படித்த யூதன். அவர் தேவனுடைய பிரதிநிதியாக யூத நம்பிக்கையும், தேசத்தையும் பராமரிக்கக்கூடிய பெரும் பொறுப்பை ஏற்றிருந்தார். நேபுகாத் நேச்சாரால் கைதிகளாக கொண்டு போகப்பட்டவர்களில் இவரது குடும்பமும் இருந்தது. அநேகம் பேர் பாபிலோனின் புதிய மண்ணில் வேரூன்றி இருந்தது போல, அவர்கள் கோரேஸ் ராஜா சந்தர்ப்பம் கொடுத்த போது எருசலேமுக்கு திரும்பின ஐம்பத்தி மூவாயிரம் பேர்களில் இருக்கவில்லை. தேவன் மற்றும் தேவனுடைய வசனம் மற்றும் இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் மேல் இருந்த விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத ஆவியின் ஆவேசத்துடன் எஸ்றா, எருசலேமுக்கு இன்னொரு வகுப்பாரை, நாடு கடத்தப்பட்டு எழுபத்தி எட்டு வருடங்களுக்கு பிறகு வழிநடத்தினார்.

யூதர்கள் பாபிலோனில் உண்மையிலேயே செழுமையாக இருந்தார்கள். அவர்கள் நாடு கடத்தப்பட்ட சமயத்தில் பிரமாணங்களையும் தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் ஆர்வத்துடன் ஆராய்ந்தார்கள். உண்மையிலேயே யூதா, அதன் பிரதான பிரதிநிதிகளில் ஒருவராகிய எஸ்றாவின் கீழ் எருசலேமில் இருந்ததைக் காட்டிலும் பாபிலோனில் செழுமையாக இருந்தார்கள். எல்லோரும் அல்ல, பக்தியுள்ள குறிப்பிட்ட சிலர் மட்டுமே. எருசலேமில் இருந்து அவர்களது சகோதரர்கள் வறுமையில் இருந்தார்கள் என்பதைக் கேள்விப்பட்டு இவர்கள் வேதனை அடைந்தார்கள். மத காரியங்களும் அங்கே செழிப்பாக இல்லை. தெய்வீக பிரசன்னத்தை குறிப்பிடுகிற தேவாலயத்தை திரும்ப கட்டுதல் குறைவாகவே வேலை செய்தது.

மெய்யான மத மறுமலர்ச்சியில் ஆவலாயிருந்த எஸ்றா, பாபிலோனிய பிரதிநிதிகளுக்கு முன்பாகவும் பெர்சியா

ராஜாவிற்கு முன்பாகவும் காரியங்களை வைத்து சாதகமான பலன்களை பெற்றார். எருசலேமில் யூதர்கள் மேலிருந்த அக்கறையினால் ஆலயத்தை பழுது பார்க்கவும் சரியான அடிப்படையில் ஆராதனை காரியங்களை ஏற்படுத்தவும் நன்கொடைகள் அதிகமாக கொடுக்கப்பட்டன. நன்கொடைகளின் மதிப்பு பொன், வெள்ளி எல்லாம் சேர்ந்து இருபது லட்சம் டாலருக்கும் அதிகமாக இருந்தது. செய்வதற்கு ஆர்வமுள்ள ஊழியர்கள் ஆயிரத்தி எழுநூறு பேர் இருந்தனர். நன்கொடைகள் ஒரு பொது ட்ரஸ்டாக இருந்தது. எஸ்றா அவற்றை ஞானமாக பிரித்து பன்னிரெண்டு பிரதானமான நபர்களிடம் கொடுத்து பற்றுச்சீட்டு வாங்கிக்கொண்டார்.

பிரயாணம் ஆரம்பிப்பதற்கு முன்னர் உபவாசம் அறிவிக்கப்பட்டது. சர்வ வல்லமையுள்ள தேவன் அவர்களை ஆசீர்வதிக்கவும் பிரயாணம் பண்ணுகிறவர்களை வழிநடத்தவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர்களிடம் பயம் இல்லாமல் இல்லை. ஏனெனில் அவர்கள் அதிகமான நிதியை எடுத்துச் செல்வது தெரிந்திருக்கும். அவர்கள் செல்லுகிற வழியில் இருந்த நாடுகள் மற்றும் கொள்ளைக்காரர்கள் மூலம் எந்த நேரத்திலும் பாதிப்பு ஏற்படலாம். அவர்கள் எடுத்துச் சென்றது பொன், வெள்ளியோடு கூட கோதுமை, திராட்சப் பழம், எண்ணெய் முதலானவைகளாக இருந்தன.

### "உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள்"

ஜெபத்துடனும், உபவாசத்துடனும் ஆரம்பித்த பிரயாணம் எஸ்றாவின் வல்லமை மற்றும் இயக்குத்திறனில் நமக்கு ஒரு உட்பார்வையை கொடுக்கிறது. "தேவன் அவருடன் இருந்தார்." அவர் தேவனுடன் நடந்து, அவரது சித்தத்தை அறிந்து அதை செய்ய நாடினார். யாராவது தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சித்து, அவருக்கு முன்பாக தங்களை தாழ்மைப்படுத்தாமல், அவரிடம் ஆசீர்வாதத்திற்காகவும், வழிநடத்துதலுக்காகவும் வேண்டுதல் செய்தால், அது நிச்சயமாக வீணாயிருக்கும். நாம் உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம் நம்மை அர்ப்பணித்து அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் ஆவலாய் இருப்பது அதிகமான நன்கொடையைக் காட்டிலும் மிகவும் பயன் அளிக்கக்கூடியது. அநேகர் மத காரியங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விட்டுவிட்டு, பொருள் சம்பாதிக்க முயற்சிக்கும் போது, கர்த்தர் அவரது ஆசீர்வாதத்தை அருளவில்லை என்றால், அவர்களது உழைப்பு வீணாகும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள்.

கடந்த நூற்றாண்டில் நமது ஆச்சரியமான பொருளாதார முயற்சி இருந்தும் தற்காலத்தில் புறஜாதியார் கடந்த நூற்றாண்டிற்கு முன்பு இருந்தது போல, இரண்டு மடங்காக இருந்தார்கள் என்கிற உண்மை "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக" என்கிற கர்த்தர் ஜெபத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. பூமியில் பரலோக நிலைமையை கொண்டு வர நாம் முயற்சித்தது பயனற்றது என்று கண்ட தேவனுடைய ஆவலுள்ள பிள்ளைகள் அனைவரும் தேவனுடைய வசனத்தை தேடுகிறார்கள். அதன் மூலம் மேசியாவின் இரண்டாம் வருகை அவரது மணவாட்டியாகிய அவரது "தெரிந்துகொள்ளப்பட்ட" சபையை இணைத்துக் கொள்வதற்கே என்று போதிக்கிறதோ இல்லையா என்பதைக் காண விரும்புகிறார்கள். அதன்பிறகு நீதியின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதையும் காண்கிறார்கள். அந்த ராஜ்யம் தெய்வீக வல்லமை மூலம் சாத்தானை கட்டி, பயத்தையும் மரணத்தையும் நீக்கிப் போட்டு, மனுக்குலத்தை உயர்த்தி, பூமியை ஒரு சொர்க்கமாக ஆக்கும்.

### மீறுதல்களின் வழிகள்

எஸ்றாவும் அவரது குழுவினரும் சரியாக நான்கு மாத பிரயாணத்தில் பாதுகாப்புடன் எருசலேமை அடைந்தார்கள். இப்போது இருக்கிற வசதிகளுடன் நான்கு நாட்களுக்குள்ளேயே அந்த தூரத்தை கடக்க முடியும். இவைகளெல்லாம் மகிமையான மேசியாவின் யுகத்திற்கு முன்னோடிகள்; நீண்ட நாட்களாக, சொல்லப்பட்டு வந்த ஆச்சரியமான செழிப்பு.

எருசலேமின் சீர்படுத்தலுக்காக தலைவரும் ஆலோசகரும் ஆன எஸ்றா குருகிய மற்றும் கொடூரமான மனமுடையவர் என்று கண்டிக்கப்பட்டிக்கிறார். பாபிலோனிலிருந்து முதலில் திரும்பிய யூதர்கள் தெய்வீக பிரமாணத்திற்கு வைராக்கியம் உடையவர்களாகவும் அவர்களது அண்டை வீட்டாராகிய புறஜாதியாருடன் கலப்பு திருமணம் செய்து கொள்ளவோ, உறவு வைத்துக் கொள்ளவோ மறுக்கிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்களது செழுமை குன்றியதால் அவர்களது வைராக்கியம் தளர்வடைந்தது. அக்கறையின்மையும் மத சார்பின்மையும் நுழைந்தது. ஆகையால் அநேக யூதர்கள் புறஜாதியினருடன் திருமணம் செய்து கொள்வதை சீக்கிரத்தில் எஸ்றா கண்டார். அந்த நிலைமை அங்கு நிலவியது. அது தொடர்ந்தால் தேசம் கெட்டுப்போகும். தேவன் தேசத்தின் தொடர்ச்சிக்கான வாக்குத்தத்தத்தை கொடுத்திருந்தார். முடிவாக பூமியின் சகல வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்த வெளிச்சம் மற்றும் சத்தியத்தை அனுப்ப அவர்களை ஒரு ஜாதியாக பயன்படுத்துவேன் என்பதே அந்த வாக்குத்தத்தம்.

இஸ்ரயேலர்களின் ஒரு பொது மகா சபை கூட்டப்பட்டது. கலப்பு திருமணம் மற்றும் பிரமாணத்தின் தேவைகளை பரிசீலிக்க அந்த கூட்டம் நடைபெற்றது. இதில் தோல்வியுற்றால் யூத சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்நியர்களாக கருதப்படக்கூடிய அபாயம் ஏற்படும். தெய்வீக பிரமாணத்துக்கு இசைவாக நடந்தால் குடும்ப உறவுகளை பிரிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்ததால் அது அழுகையும் வருத்தமும் துன்பமும் உள்ள காலமாக இருந்தது. தெய்வீக பிரமாணம் மீறப்பட்டு இப்பொழுது அதன் தண்டனை உணரப்பட்டது. மீறுதலின் வழிகள் கடினமாக இருந்தன.

இஸ்ரயேல் தேசம் சீனாய் மலையில் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்கு கீழாக இருந்தது என்பதை அறிந்தவர்கள் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் முக்கியத்துவத்தை புரிந்துக்கொள்ளக் கூடும். தேசமானது அந்த நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் கீழாக இருந்தது. அப்படிப்பட்ட பிரமாணம் வேறு எந்த தேசத்திற்கும் இருந்ததுமில்லை. இப்போது இருக்கவுமில்லை. இப்போது நியாயப்பிரமாணத்திற்கு கீழ் இல்லாமல் கிருபையின் கீழ் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு கூட கொடுக்கப்படவில்லை. யூதர்கள் இந்த பிரமாணத்திற்கு விசுவாசமாயிருப்பதை நாம் மறுக்கக்கூடாது. ஏனெனில் எப்பொழுதும் இருந்தது போல

நியாயப்பிரமாணம் அவர்களை கட்டுப்படுத்துகிறது. எரேமியா 31:31-இல் குறிப்பிடப்பட்டிருக்கிற புதிய உடன்படிக்கை வரும்வரை நியாயப்பிரமாண உடன்படிக்கை அவர்களைக் கட்டுப்படுத்தும். தலையும் சரீரமுமாகிய மகா மேசியா புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். இந்த சுவிசேஷ யுகத்தின் மேலான பலிகளின் இரத்தத்தினால் இந்த புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படும்.

இந்த பிரமாணத்திற்கு இசைவாக கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் கொடுக்கிற கட்டளை என்னவென்றால் அர்ப்பணம் செய்த கிறிஸ்துவின் சீஷர்கள் உலகத்தாரோடு கலப்பு திருமணம் செய்யக்கூடாது என்பதாகும். “கர்த்தருக்குள் இருக்கிறவர்களுடன்” மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும். (2 கொரிந்தியர் 6:14) இந்த கட்டளையில் தெய்வீக ஞானம் நிச்சயமாக இருக்கிறது. எனினும் இது ஒரு பிரமாணம் அல்ல. அர்ப்பணம் பண்ணாதவர்களை திருமணம் செய்திருக்கிற கிறிஸ்தவர்கள் அவர்களை விட்டு பிரியாமல் திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

R4912

## CO - LABOURERS WITH GOD
## தேவனுடன் உடன் வேலையாட்கள்

நெகேமியா 4

“விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள்; புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்.” 1 கொரிந்தியர் 16:13

நெகேமியாவின் எருசலேமுக்கான ஜெபமும் அதை மையமாகக் கொண்ட அக்கறையும் அதற்கான பதில் வருவதற்கு முன்னர் மாதக்கணக்காக தொடர்ந்தது. இவர் நம்பகமான செயலாளராக இருந்த ராஜா ஒரு விருந்தை ஆயத்தப்படுத்தினான். அதில் ராணியும் நெகேமியாவும் மற்றவர்களும் இருந்தனர். அதில் எல்லோரும் சந்தோஷமாகவும் களிப்பாகவும் அவர்களது பட்டு மற்றும் நகைகளைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ராஜாவின் நம்பிக்கையான அதிகாரி நெகேமியா தனது துக்கத்தை புன்னகை மூலம் காண்பித்தான். அது வியாதியினால் வந்ததல்ல, மனதின் துக்கம் என்பதை அறிந்த ராஜா அதைக் குறித்து விசாரித்தான். அது நெகேமியாவுக்கு ஒரு அபாயகரமான வேளையாக இருந்தது. ஏனெனில் அந்த காலத்தில் ராஜாக்கள் எதேச்சாதிகாரமும் சலன புத்தியும் உள்ளவர்களாக இருந்தார்கள். இந்த மன வருத்தம் ராஜா மற்றும் அவரது காரியங்களில் அக்கறையில்லாததாக கருதப்படுமோ அல்லது சந்தோஷத்தில் கலந்து கொள்ளாததற்கு அநேக காரணங்கள் யூகிக்கலாம் என்று பயந்தார்.

ராஜாவுக்கு எப்படி பதில் கூறுவது என்பது குறித்த எரேமியாவின் ஜெபம் தேவனிடம் சென்றது. இதற்கு முன்பு அவர் ஜெபித்திருந்தும் அதற்கு பதில் உடனே கிடைக்கவில்லை. வாயின் மூலம் வெளிப்படுத்தாத அல்லது உச்சரிக்கப்பட்ட அவரது மனவிருப்பத்தை தேவனால் கேட்க முடியும் என்பதை நெகேமியா அறிவார். ஞானமான மற்றும் வெற்றிகரமான பதிலுக்கு தேவையான ஞானத்தை அவர் பெற்றார். அது ராஜாவை புண்படுத்தவில்லை. ஆனால் அவரது ஆவலை பட்டியலிட்டது. அவரது பிதாக்களின் தேசம் பாழாய்க்கிடக்கிறதினாலேயே அவரது மனம் வேதனையிலிருக்கிறது என்று பதிலளித்தார். அதன் பலனால் யூதேயாவுக்கு விசேஷமான கவர்னராக அவரை நியமித்து, மற்ற கவர்னர்களிடமிருந்து தேவையான உதவிகளை பெறவும் ராஜாவிடம் இருந்து உத்தரவு கிடைத்தது.

### முறைமைகளினால் ஞானம் காண்பிக்கப்படுகிறது

நெகேமியா ஒரு ஞானமுள்ள மனிதன். அவர் பயன்படுத்திய முறைமைகளை வேறு யாரும் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். அவர் ஒரு பணக்காரர். அவரது பிரயாணத்திற்கும் ராஜா அனுப்பிய பரிவாரங்களுக்கும் தனது சொந்த பணத்தையே அநேகமாக செலவு செய்திருக்கலாம். நான்கு மாத பிரயாணம் அவர்களை எருசலேமுக்கு கொண்டு வந்து சேர்த்தது. அவரது பிரயாணத்தின் நோக்கம் இரகசியமாக வைக்கப்பட்டது. சில நாட்கள் அவர் ஒரு பார்வையாளராக பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தார். பிறகு இரவில் பழைய நகரத்தில் சுவர்களை குறிப்பாக உடைந்து போன பாகங்களையும் இடிபாடுகளின் குவியல்களையும் பார்வையிட்டார். அவைகளிலிருந்துதான் அவர்கள் அதை திரும்பக் கட்டுவார்கள். அதை எப்படி கட்டலாம் என்கிற ஒரு திட்டத்தை, சாத்தியக்கூறை தனது மனதில் கண்டார். அவர் மூப்பர்களையும் பிரபலமான பிரதிநிதிகளையும் கூட்டிச் சேர்த்து தான் வந்த நோக்கத்தை தெரிவித்தார். ராஜாவிடமிருந்து பெற்று வந்த கட்டளைகளையும் காண்பித்து பழுது பார்க்கும் வேலையை உடனே ஆரம்பிப்பதற்கான ஒரு முறையையும் தெரிவித்தார்.

மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். ஏனெனில் எதிரிகள் அதை தடை செய்ய வேண்டும் என்று ஆவலாய் இருந்தார்கள். எப்படியாவது இதை முடிக்க வேண்டும் என்று நெகேமியா மிகவும் ஆவலாய் இருந்தார். சமாரியர்கள் மிகவும் பொறாமை கொண்டார்கள். சமாரியர்கள் யேகோவாவை ஆராதிப்பதில் போட்டியான ஒரு முறையை கொண்டிருந்தார்கள். இஸ்ரயேலரின் வெற்றி தேவனுடைய கிருபை சமாரியர்களைக் காட்டிலும் இஸ்ரயேலருக்கே செல்லும் என்று அவர்கள் நினைத்தார்கள். இஸ்ரயேலரின் வறுமை மற்றும் உதவியற்ற நிலைமையினால் அவர்கள் அனுகூலம் அடைய நம்பிக்கை கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் அவர்களை கொள்ளையடிப்பது தவறில்லை என்று நினைத்தார்கள். நெகேமியாவின் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் இருந்து மிகவும் முக்கியமானவர்கள் தொழிலாளர்களுடன் வேலையில் சேர்ந்து கொண்டு தங்கள் வீட்டிற்கு எதிரே இருக்கிற பகுதியை கட்ட வேண்டும். இது ஞானமான திட்டமாக இருந்தது. ஏனெனில் தங்களுக்குப் பக்கத்தில் சுவர் மிகவும் பலமுள்ளதாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இந்த வேலையுடன் ஒரு குறிப்பிட்ட பெருமையும் இணைந்திருக்கும். ஏனெனில் அது கட்டுமான திறமையினால் ஒரு முக்கியமான நினைவுச் சின்னமாக இருக்கும்.

நெகேமியா மற்றவர்களுடன் வேலையில் இணைந்து கொண்டார். அவர்களது ஊழியர்களும் அதில் பங்கு பெற்றார்கள். அவரது வைராக்கியத்தின் ஆவி ஊக்கமற்ற ஜனங்களுக்கு ஒரு உத்வேகமாக இருந்தது. அவர்கள் மனதைத் தேற்றி விருத்தியடைய ஆரம்பிக்க நம்பிக்கை

கொண்டார்கள். பிறகு எதிரிகளிடமிருந்து எதிர்ப்பும் ஊக்கமின்மையும் வந்தது. ஒரு தாக்குதல் கூட திட்டமிடப்பட்டிருந்தது. அதை அறிந்த நெகேமியா, குடும்பத் தலைவர்களை வேலை செய்யும் போது ஆயுதங்களையும் ஏந்தியிருக்கும்படி கூறினார். வேலை செய்பவர்களும் பாதுகாப்பிற்காக ஒரு கையில் ஆயுதமேந்தி இன்னொரு கையில் வேலை செய்தார்கள்.

அவர்கள் ஆயத்தமாயிருந்ததை அறிந்த எதிரிகள் திட்டமிட்டிருந்த தாக்குதலை கை விட்டு சோர்வடைந்தார்கள். யூதர்களது முயற்சி கேலி செய்யப்பட்டது, ஏளனத்துக்குள்ளானது, நிறைவடையாது என்று குறை கூறப்பட்டது. கைமுறை உழைப்பில் பழக்கம் இல்லாதவர்கள் சீக்கிரத்தில், புண், சோர்வு மூலம் உற்சாகம் இழந்தார்கள். சுவர்கள் உயர, உயர, கற்களை வைப்பதும் சுண்ணாம்பு கலவையை வைப்பதும் கடினமானது. அதிகமான கற்கள் சுவற்றில் வைக்கப்பட்டன. தகுதியான சில கற்கள் மட்டுமே குப்பைகளுடன் இருந்தன. தேவனிடத்தில் விசுவாசத்தையும் உண்மைத்தன்மையையும் சோதிக்கிற காலமாக அது இருந்தது. சோதனைகளும் கஷ்டங்களும் தேவனுடைய பிள்ளைகளுக்கு நீதியான சோதனையாக வரும்படி அனுமதிக்கப்பட்டன. ஜெயங்கொண்டவர்கள் பல்வேறு அனுபவங்கள் மூலமாக தேவனுடைய ஊழியத்திற்கு அபிவிருத்தி அடைகிறார்கள்.

**“விசுவாசத்தில் நிலைத்திருங்கள்”**

எரேமியாவின் விசுவாசமும் தைரியமும் ஏன் சோதிக்கப்பட்டது, அவருக்கு கிடைத்த பரிசு என்ன என்று நாம் கேட்கப்படலாம். ஒவ்வொரு நல்ல முயற்சியும் குணலட்சண அபிவிருத்தியை பரிசாக பெறுகிறது. நெகேமியாவின் காலத்தில் விசுவாசமாக வாழ்ந்தவர்களின் பரிசு, இயேசுவின் சீஷர்களுக்கான பரிசிலிருந்து வேறுபடுகிறது. பின்னால் கூறப்பட்டவர்கள் மேசியாவின் மகிமையான ராஜ்யத்தில் ஆண்டவருடன் ஒரு பங்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தார்கள். “பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.” “ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி அருள் செய்வேன்.” (லூக்கா. 12:32; வெளி. 3:21)

ஆனால் நெகேமியாவுக்கு இந்த ராஜ்ய வாக்குத்தத்தத்தில் பங்கில்லை. ஏனெனில் அவர் பெந்தெகொஸ்தேவுக்கு முன்னர், ராஜ்ய அழைப்புக்கு முன்னர் வாழ்ந்தார்.எபிரேயர் 11இல் பரிசுத்த பவுல் கூறியிருக்கிற பட்டியலில் நெகேமியாவும் அவர் காலத்தில் வாழ்ந்த விசுவாசமும் உண்மையும் உள்ளவர்கள் சேர்க்கப்படவில்லை. ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி அவர்களும் சேர்க்கப்படுவார்கள். “தேவனை பிரியப்படுத்துகிற இந்த சாட்சியத்தை பெற்றிருந்தார்கள்.” சபையானது முதலில் பரலோக ராஜ்யத்தில் இரட்சகருடன் அதன் பங்கை பெற்ற பிறகு பழைய ஏற்பாட்டுக் கால விசுவாசிகள் பூமிக்குரிய ராஜ்யத்தில் ஒரு பங்கை பெறுவார்கள் என்று அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறார். “அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையான தொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.”

தேவனுக்கு சுதந்தரரும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும் ஆகும் நம்பிக்கையுடைய அனைவருக்கும் நமது தலைப்பு வசனத்தில் உள்ள பரிசுத்த பவுலின் வார்த்தைகள் குணலட்சண அபிவிருத்திக்கு தேவையான அதே பெரிய பாடத்தை போதிக்கின்றன. அவர்கள் விழித்திருந்து, ஜெபிக்க வேண்டும். அவர்கள் பல்வேறு எதிர்ப்புகளாகிய உலகம், மாமிசம் மற்றும் எதிராளிக்கு எதிராக “விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும்.” அவர்கள் “கர்த்தரிலும் அவருடைய சத்தியத்திலும் பலப்பட்டு,” தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சோதனைகள், துன்பங்கள் மற்றும் தடைகள் மூலமாக அவர்கள் பலமாக அபிவிருத்தி அடைந்து கர்த்தருடைய நாமத்திலும் அவரது உதவியிலும் ஜெயங்கொள்ள வேண்டும்.

**R4912**

# THE VALUE OF PRAYER
# ஜெபத்தின் மதிப்பு

நெகேமியா 1

“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.” யாக்கோபு 5:16

எஸ்றாவின் குழுவினர் எருசலேமுக்கு திரும்பிய பதிமூன்று வருடங்களுக்கு பிறகு, நெகேமியா, எருசலேமின் அலங்கத்தைக் கட்டவும் அதன் வாசல்களை புதுப்பிக்கவும் மெய்க்காவலுடனும் பெர்சியா ராஜாவினிடத்திலிருந்து முழு அதிகாரத்துடனும் அங்கு சென்றார். எஸ்றாவின் சீர்த்திருத்தம் ஜனங்களுக்கு உதவிகரமாக இருந்தாலும், அவர்களது அயலாரின் வன்முறையான எதிர்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. யூதர்கள் தற்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருந்து, அவர்களை அந்த தேசத்திலிருந்து துரத்த விருப்பங்கொண்ட அவர்களது அயலகத்தார் மூலம் இகழப்பட்டார்கள். நகரத்தின் சுவர் மிகவும் பலவீனமாக இருந்தது. அது தாக்குதலை தாக்குப்பிடிக்காது.

நெகேமியா, வசதியுள்ளவராய் பெர்சியா ராஜாவின் அனுகூலத்தைப் பெற்று ராஜாவின் சூசான் அரண்மனையில் வசித்தார் என்று யூத சரித்திர ஆசிரியர் ஜோசபஸ் கூறுகிறார். நெகேமியா பக்தியுள்ளவர், தனது பிதாக்களின் தேசத்தின் மேல் மிகுந்த அக்கறையுள்ளவராயிருந்தார். ஒரு நாள் நெகேமியா நடந்து கொண்டிருந்த போது இருவர் எபிரேயு மொழியில் பேசிக் கொண்டிருப்பதை பார்த்து அவர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் எருசலேமுக்கு சென்று திரும்பியிருந்தார்கள். அதில் ஒருவர் அவரது உறவினராக இருந்தார். அவர் அவர்களிடம் பரிசுத்த தேசம், பரிசுத்த நகரம், தேவனுடைய ஆலயம் மற்றும் பாபிலோனிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் குறித்தும் விசாரித்தார். நகரம் பாழாய் கிடக்கிறதையும், யூதர்களின் சோதனைகளையும், சத்துருக்களின் மூலம் நேரிட்டவைகளையும் கூறினார்கள். அவர் மிகவும் வேதனையடைந்து தேவனை நோக்கி ஜெபித்தார். இந்த பாடம் அந்த ஜெபத்தைப் பற்றியது தான்.

## நமது சொந்த ஜெபங்கள் பதிலளிக்கப்படுதல்

பதிவு செய்யப்பட்டுள்ள நெகேமியாவின் ஜெபம் சுருக்கமாக எழுதப்பட்ட அறிக்கை. ஏனெனில் அவர் தனது செயல்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நான்கு மாதங்களாக ஜெபித்துக் கொண்டிருந்தார். தேவன் அவரது வேண்டுகோளை நிறைவேற்ற அவரைப் பயன்படுத்தினார். "எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று தமது சீஷர்களுக்கு கர்த்தர் அறிவுறுத்தியதை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. இப்படியாக சீஷர்கள் ஜெபம் செய்தபோது அவர்களது ஜெபத்திற்கேற்றபடி அவர்கள் உழைத்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் தங்கள் சொந்த சக்தியினால் அறுவடையில் முன்னேறவும் மற்ற ஊழியர்களை உற்சாகப்படுத்தவும் வேலை செய்தார்கள். இப்படியாக ஊக்கமான முயற்சியுடன் எப்பொழுதும் ஜெபமும் இணைகிறது. முயற்சியுடன் இணையாத ஜெபங்கள் நேர்மையற்றதாக கருதப்படும். விசுவாசமில்லாத ஜெபம் வேதத்திற்கு புறம்பானதாகவும் புனிதமற்றதாகவும் பாவமாகவும் இருக்கிறது.

## ஆத்துமாவின் உண்மையான விருப்பம்

ஜெபம் என்பது "உச்சரிக்கப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்படாத ஆத்துமாவின் உண்மையான விருப்பம்" என்று ஒரு கவிஞன் கூறியிருக்கிறான். இன்னொருவன் ஜெபம் என்பது "கிறிஸ்தவனின் உயிர் மூச்சு" என்று கூறியிருக்கிறான். சுவாசம் இல்லாமல் மனித உயிர் எப்படி நீடிக்க இயலாதோ, அது போல ஜெபம் இல்லாமல் கிறிஸ்தவ குணலட்சணம் பராமரிக்கப்பட இயலாது. மாபெரும் வேதாகம குணலட்சணம் உடைய அனைவரும் சர்வ வல்லவரிடம் சென்று எல்லா காரியங்களிலும் அவரது வழிநடத்துதலுக்காக ஜெபிப்பதை வழக்கமாக கொண்டிருந்ததை யார் கவனிக்காமல் இருக்கிறார்கள். மகா இரட்சகரும் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் கூட பிதாவினிடத்தில் ஜெபிப்பது அவசியமாயிருந்தது. அவருடன் தொடர்பும் ஐக்கியமும் கொண்டிருப்பது அவசியமாயிருந்தது. அவரது அநேக ஜெபங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அநேக தடவை இரவு முழுவதையும் ஜெபத்தில் கழித்தார் என்று நாம் போதிக்கப்படுகிறோம்.

நமது மன்றாட்டை கேட்பதற்காக சர்வ வல்லவர் தமது திட்டங்களை மாற்றுவாரா என்று சிலர் நம்மை கேட்கலாம். நிச்சயமாக இல்லை. மாறாக, நாம் அவரது சித்தத்திற்கு இசைவாக கேட்கும்படி நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். தவறானதை நாம் கேட்டால் அது பதிலளிக்கப்படாது என்று எச்சரிக்கப்படுகிறோம். எனவே தேவனுடைய வசனத்தை படித்து, தெய்வீக திட்டத்தைப் பற்றிய அறிவை பெறுவது அவசியமாகிறது. அதன் மூலம் அதன் ஒவ்வொரு அம்சத்திற்கும் இசைவாக நாம் ஜெபித்து, அது பதிலளிக்கப்படுவதின் மூலம் நாம் பலத்தையும் உற்சாகத்தையும் பெறுகிறோம்.

இரட்சகர் அது குறித்து முக்கியமான குறிப்பை நமக்கு கொடுத்திருக்கிறார். "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்." (யோவான் 15:7) இந்த வாக்குத்தத்தத்தின் இரண்டு எல்லைகளை சிலர் மட்டுமே கவனிக்கிறதாக தெரிகிறது.

(1) ஜெபிக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குள் இருந்து அவரில் நிலைத்திருக்க வேண்டும். இதன் பொருள், ஜெபிப்பவர் பாவத்தில் இருந்து மனந்திரும்பி கிறிஸ்துவையும் சீஷத்துவத்தின் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அவர் தனது வாழ்க்கையை கர்த்தரிடம் முழு அர்ப்பணம் செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியாக ஆகியிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் இப்படிப்பட்டவர்கள் பிதாவானவரிடம் ஜெபிக்கலாம்.

(2) மேசியாவாகிய தலையானவருடன் அங்கத்துவத்திற்குள்ளும் ஐக்கியத்திற்குள்ளும் வந்த பிறகு, இவர்கள் தேவனுடைய வசனம் மற்றும் வாக்குத்தத்தத்திற்கு இசைவாக மன்றாடலாம். நாம் எதை கேட்க வேண்டும் என்பதை அறிய வேத வாக்கியங்களை ஆராய வேண்டும். அதுவே போதுமானது. "தேவனுடைய மனுஷனுக்கு சகலமும் அருளப்பட்டிருக்கிறது." நாம் ஜெபிக்க வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றன. அதற்கான பதில் தெய்வீக திட்டத்தில் எவ்வித மாறுதலும் இல்லாததாக இருக்கும். வாழ்க்கையின் அனைத்து சிறுகாரியங்களும் முன்னரே தீர்மானிக்கப்பட்டது அல்லது முன்னறிவிக்கப்பட்டது அல்ல. உலகப்பிரகாரமான காரியங்களைப் பொறுத்தவரையில் பெரும்பாலான காரியங்கள் இயற்கையான பிரமாணங்களின்படி நடக்கின்றன. பொதுவாக தேவன் இதில் தலையிடுவதில்லை. தேவனுடன் அர்ப்பணம் செய்த அவரது ஜனங்களின் காரியங்களில் அவர் விசேஷித்த அக்கறை எடுப்பார் என்று தேவன் நமக்கு உறுதி அளிக்கிறார். இவைகள் எல்லாம் அவரால் மேற்பார்வையிடப்படுகிறது. அவருடைய தெய்வீக கிருபையினால் அவரது பிள்ளைகளுக்கு சகலமும் அவர்களது நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.

## எதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்

தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் அவர்கள் பெற்றிருக்கிற சிறு திறமைகளையும் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சேனாதிபதியாக இருந்து, அவர்களது சொந்த குடும்பத்திலும் சொந்த நகரத்திலும் பயன்படுத்தினால் தேவன் மிகவும் சந்தோஷப்படுவார். அதைப் பயன்படுத்துவது அவர்களது ஜெபங்கள் மற்றும் முயற்சிகளின் அக்கறையின்படி இருக்கும். கர்த்தர் மற்றும் அவரினிமித்தம் ஊழியம் செய்யும் சந்தர்ப்பத்திற்காக ஜெபிக்கிறவர்களும் அவர்களது ஜெபத்தின் நிறைவேறுதலுக்காக விழித்திருப்பவர்களும் சந்தர்ப்பத்தின் கதவுகள் நிச்சயமாக திறக்கப்படுதலை காண்பார்கள்; "தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்."

கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள், கர்த்தர் தமது ஜெபத்தில் "இன்றைக்குள்ள ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்" என்று கூறி உள்ளது போல பூமிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கலாம். ரொட்டிக்கும் தண்ணீருக்கும் நாம் ஜெபிக்கலாம். தேவன் அதை அங்கீகரித்திருக்கிறார். அதற்கும் மேலாக நாம் கேட்கக்கூடாது. உண்மையான கிறிஸ்தவன் நான் என்னத்தை உண்பேன், என்னத்தைக்

குடிப்பேன், என்னத்தை உடுப்பேன் என்று பூமிக்குரிய காரியங்களுக்காக ஜெபிக்காமல் மேலானவைகளை, பரத்துக்குரியவைகளை நினைத்துக்கொண்டும் ஜெபித்துக் கொண்டும் இருப்பான். அவன் குறிப்பாக ஆவிக்குரிய உணவு, ஆவிக்குரிய வஸ்திரம், கிருபையிலும், அறிவிலும் அன்பிலும், ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், ஜெபிக்கவும் முயற்சிக்கவும் செய்வான்.

நமது கர்த்தர் அறிவிக்கிறதாவது: "இவைகளையெல்லாம் (உணவு, உடை) அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள். நீங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்." நாம் தேவனுக்கு சுதந்தரரும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும் ஆகும்படியான தெய்வீக அழைப்பின்படி மேசியாவின் மாபெரும் ராஜ்யத்தில் தேவனுடைய ஜனங்கள் உடன் சுதந்தரத்துவத்தை அடையக்கூடியவர்களாக இருக்கிறார்கள். குணலட்சண அபிவிருத்தியை தேடுவதின் மூலம் கர்த்தருடன் அவரது ராஜ்யத்தில் அவரது சிங்காசனத்தில் உரிமையை நாடித் தேட வேண்டும். குணலட்சணம் தெய்வீக அங்கீகாரத்தைப் பெற்று நம்மை உயர்வான இடத்திற்கு தகுதியுள்ளவர்களாக்கும். இவைகள் நீதியின் ராஜ்யத்தை தேடுவதாக நமது கர்த்தர் பேசுகிறார். நீதியை செயல்படுத்துவதற்காகவே மனிதரிடையே அந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராக இருக்கப் போகிறவர்கள் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்க வேண்டும்; இந்த ராஜ்யத்திலும் அதன் கனம், மகிமை மற்றும் சாகாமையிலும் பங்கு பெறுவதற்கு மரிப்பதற்கு முன்னர் இந்த குணலட்சணத்தில் அபிவிருத்தி அடைய வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக அவன் இதற்காக நாடிக் கொண்டும் முயற்சித்துக் கொண்டும் மற்றும் ஜெபித்துக் கொண்டும் இருப்பான்.

R4913

# THE ROYAL DIADEM
# ராஜ முடி

"புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்... நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியுமாயிருப்பாய்." ஏசாயா 62:2,3

எரேமியா தீர்க்கதரிசி ஒரு இடத்தில் அறிவிக்கிறதாவது: "அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற யேகோவா என்பதே." இன்னொரு இடத்தில் அவர் கூறுகிறதாவது: "அவர் எங்கள் நீதியாயிருக்கிற யேகோவா என்பது அவருடைய நாமம்." இது போல அப்போஸ்தலரும் அறிவிப்பதாவது: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு." (எரேமியா 23:6; 33:16; 2 கொரிந்தியர் 5:21)

இந்த அறிக்கைகள் எல்லாம் சீயோனைக் குறிக்கிறது. நிழலான (அடையாளமான) சீயோன் யூத தேசமாகும். மெய்யான சீயோன் மகிமையடைந்த கிறிஸ்து. சபைக்கான ஆசீர்வாதங்கள் ஆவிக்குரிய தளத்திற்குரியது என்றும் பூமிக்குரிய தளத்தில் என்றென்றைக்கும் தெய்வீக கிருபையில் இருக்கும் பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரருக்கு இருக்கும் என்றும் நாம் மிகவும் சரியாக புரிந்து கொள்ளலாம்.

"அலங்காரமான கிரீடம்" மற்றும் "ராஜ முடி" என்ற இரு சொற்றொடரும் ஒரே அர்த்தமுடையது. இரு தடவை வந்திருப்பதால் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ராஜ முடி என்பது கிரீடம். கிரீடங்கள் பொதுவாக அதை அணிந்திருப்பவர்களின் மதிப்பையும் கனத்தையும் சேர்க்கிறது. ஆனால் வேதாகம சொற்றொடர் "அலங்காரமான கிரீடம்... உன் தேவனுடைய கரத்தில் ராஜ முடியாயிருப்பாய்." இது தேவனுக்கு மகிமை கொடுப்பதற்காக அணியப்படுவதில்லை. இதற்கு பதிலாக தெய்வீக கரத்தில் ஒரு அழகான ஆபரணத்தைக் குறிக்கிறது. நீங்கள் எதையாவது கையில் எடுத்துச் செல்லும் போது அதன் வேலைப்பாடும் அழகும் காணப்படுவது போல இது இருக்கிறது.

இந்த ஆபரணம் மகா பெரிய சிற்பாசாரியால் சரியானபடி சோதிக்கப்படும் போது அந்த முடி அழகானதாக ஆக்கப்படும். கர்த்தர் அவரது ஆபரணங்களை அலங்காரம் செய்யவும் பத்திரப்படுத்தவும் வருவார். "தேவன் அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்." எதிர்காலத்தில் ராஜ்ய நிலைமையில் அவயவங்களை இறுதியாக வைக்கிற காரியத்தை வசனம் குறிப்பிடுகிறது. மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் வேறுபடுவது போல ஆபரணங்கள் இடத்தையும் வைக்கப்படுதலையும் பொறுத்து மாறுபடுகிறது. இந்த காலத்திற்கும் பொருந்தும். தற்கால ஏற்பாடுகள், தனிப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிவர்களா அல்லது மாட்டார்களா என்பதைப் பொருத்து மாறக்கூடியதாக இருக்கிறது. ஆபரண வகுப்பாரை தெரிந்தெடுத்தல் அங்கே இருந்திருக்கிறது. சுவிசேஷ யுகத்தில் இந்த வகுப்பாரின் அனுபவங்கள் மெருகூட்டும் செயல்முறையாக இருக்கிறது. சபை நிறைவை அடையும் போது, இந்த யுக முடிவில் அவயவங்களை பொருத்துகிற வேலை நடைபெறும். முதலாம் உயிர்த்தெழுதலின் போது இது ஆரம்பித்தது.

ராஜ முடியில் முதலாவது பொருத்தப்பட்டவர் சந்தேகத்திற்கிடமில்லாமல் நமது கர்த்தராகிய இயேசுவேயாகும். யேகோவா தேவனின் கையிலிருக்கும் ராஜ முடியில் முதலாவதாக அவர் இருக்கிறார். முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணராக்கப்படுவதால் சரீர அங்கங்கள் அடுத்ததாக வருவார்கள். அப்போஸ்தலர் நித்திரையிலிருக்கும் பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும், "ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாகுதல்" கொடுக்கப்பட்டிருப்பதால் பொருத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆபரணமும் தயாரானதைக் கண்ட யேகோவா தேவன் குறிப்பிட்ட இடத்தில் பொருத்துகிறார்.

யாக்கோபு மற்றும் யோவானின் தாயார் அவர்களுடன் இயேசுவிடம் சென்று, அவளது மகன்கள் அவரது வலது பக்கத்தில் ஒருவரும் இடது பக்கத்தில் ஒருவருமாக இருக்க

வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர் அந்த இடங்கள் யாருக்கென்று பிதாவானவரால் ஆயத்தப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே கிடைக்கும் என்றார். அந்த இடங்கள் சலுகையின்படி கேட்கப்படாமல் நீதியின்படி கொடுக்கப்படுகிறது. இந்த குழுவில் எந்த இடமும் மகிமையானது தான். அவர் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் யார் உட்காருவார்கள் என்று சொல்ல தேவன் திறமையுள்ளவர் நமது தேவன் மட்டுமே. அவரது சித்தம் நிறைவேறுவதில் நாம் சந்தோஷமடைவோம். திரைக்கப்பால் பரந்த நீதியின்படியே இருக்கும். பிதாவானவர் அதை ஏற்பாடு செய்திருப்பதால் நாம் சந்தோஷம் அடைவோம்.

கர்த்தர் முதலாவதாக இருக்கிறார். அடுத்தபடியாக பரிசுத்த பவுல் இருப்பார் என்று நினைக்கிறோம். பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த யோவானும் பிரதானமான இடத்தில் இருப்பார்கள் என்று நினைக்கிறோம். பிதாவானவர் எதை தீர்மானம் பண்ணுகிறாரோ அதில் நாம் பரிபூரண திருப்தியும் சந்தோஷமும் அடைவோம். எந்த இடமாயிருந்தாலும் நாம் சந்தோஷம் அடைவோம். இந்த ஆவியும் இந்த குணலட்சணமும் இல்லாதவர்கள் அந்த வகுப்பில் கர்த்தர் இருக்கிற அங்கு இருக்க மாட்டார்கள். அந்த வகுப்பில், இருக்கப் போகிறவர்கள் பிதாவானவரின் கட்டளையை ஏற்றுக்கொண்டு, எதற்காக அவர்கள் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அதை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆகையால் தேவனுடைய கையில் இருக்கும் சபையானது தெய்வீக வல்லமையின் கரத்தில் இருக்கும் சபையாக இருக்கிறது. அந்த வல்லமையானது சபையை பயன்படுத்தும். சபையானது மகிமையின் கிரீடமாகவும் அழகான ஒன்றாகவும் இருந்து அது நித்தியத்துக்கும் தேவனுடைய வேலைப்பாட்டின் மகிமையை பிரதிபலிக்கும். அது எவ்வளவு மகிமையாக இருக்கும்! எவ்வளவு அழகாக இருக்கும்! கர்த்தராகிய யேகோவா இந்த விலையேறப்பெற்ற ஆபரணங்களை ஒன்றின்மேல் ஒன்று பிரதிபலிக்கும்படி மகிமையின் கிரீடத்திலும் அழகான ராஜ முடியிலும் பொருத்துவார். கர்த்தராகிய இயேசு அதில் பிரதானமான இடத்தில் இருப்பார். ஏனெனில் பிதாவானவர் கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுக்காத மகிமையை சபைக்கு கொடுக்கமாட்டார். சபையானது மனிதர்களுக்கு முன்பாக தேவனுடைய கை வேலையில் "அழகான ஒன்றாகவும் நித்திய சந்தோஷமாகவும்" வெளிப்படுத்தப்படும்.

அவர் இப்பொழுது ஆபரணங்களை தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் அவர்களிடம் தற்காலிகமாக தொடர்பு கொண்டிருக்கிறார். மெருகூட்டும் வேலை நிறைவடையும் போது அவர்களை மிகவும் விசேஷித்த விதமாக ஆயிரம் வருட யுகத்தில் பயன்படுத்துவார். ஒரு நட்சத்திரம் மகிமையில் ஜொலிக்கிறது போல சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் பயன்படுத்துவார். ஆனால் சபையின் பயன், கர்த்தர் எந்த அளவுக்கு பயன்படுத்த நோக்கம் கொண்டிருக்கிறாரோ அதில் ஒரு பகுதி தான் பயன்படுத்துவார். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் இயேசு கிறிஸ்துவுக்குள் விளங்கச் செய்வார்."எபேசியர் 2:7.

கிறிஸ்துவுக்குள் இருக்கிற அனைவருக்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் தெரிந்துகொள்ளப்பட்ட அனைவருக்கும் அவரது மேன்மையான கிருபையை காண்பிப்பார். அவரது கிருபையும் இரக்கமும் சபையின் மேல் பொழியப்படும். உலகமானது முடிவாக தேவனுடைய சிருஷ்டிப்பின் வேலையின் உச்சக்கட்டத்தை சபையில் பார்க்கும். சபையின் மகிமை தேவதூதர்கள் மற்றும் மனிதரின் பார்வைக்கு வெளிப்படுத்தப்படும். நமது "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதில்" நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் கர்த்தர் குறிப்பிடுகிற ஆசீர்வாதங்கள் நம்முடையது என்று குறிப்பிடுகிறார்.

நாம் உலகத்திலிருந்தும் மாபெரும் ஸ்தாபனமாகிய பேர் கிறிஸ்தவ சபைகளிலும் பிரித்தெடுக்கப்பட்ட "சொந்த ஜனங்கள்" என்பதை நாம் மறவாதிருப்போமாக. நாம் மேலான நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களைப் பெற்று, தேவனுடைய ஆழமான காரியங்களில் தெளிவான நுண்ணறிவையும் பெற்று, நமது பழைய அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம். இப்படியாக உலகத்திலிருந்தும், உலக ஆவியில் அதிகமாக பங்கு பெறுகிற கிறிஸ்தவர்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருந்தால், அவர்கள் நம்முடன் இணக்கமாக இல்லாதிருப்பதிலும், ஆண்டவருடைய சித்தத்தை நாம் நிறைவேற்றுவதில் நம்மை அவர்கள் அசட்டை பண்ணுவதிலும் எதிர்ப்பதிலும் என்ன ஆச்சரியம் இருக்கிறது.

R4914

## INTERESTING QUESTIONS
## ஆவலைத் தூண்டும் கேள்விகள்

### உயிர்த்தெழுதலில் திருமணம் இல்லை

**கேள்வி :** கர்த்தரால் உறுதிப்பண்ணப்பட்ட ஆண், பெண் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துதல், நீங்கள் தேவனுடைய திட்டத்திலிருந்து தெரிந்துகொண்டபடி பூமியிலும் பரலோகத்திலும் எப்பொழுதும் தொடருமா?

**பதில் :** இல்லை என்று நாம் பதிலளிக்கிறோம். திருமணம் என்பது ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக மானிட குடும்பத்திற்கு மட்டுமே தேவன் ஏற்படுத்தியிருந்தார். தகப்பன் ஆதாமிலிருந்து தாய் ஏவாளை தேவன் பிரித்தெடுத்தது (அவள் விலா எலும்பிலிருந்து எடுக்கப்பட்டவள்) ஒரு சந்ததியை ஏற்படுத்துவதற்காக என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. திருமணம் என்பது அவர்கள் இருவரும் தங்களை ஒருவராக அங்கீகரித்து இணைவதாகும். ஆகையால் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாய் இருக்கிறான் என்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்றும் நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகிறேன்."

தேவனுடைய திட்டத்தில் ஆவிக்குரிய தளத்தில் ஆண், பெண் என்கிற ஏற்பாடு இருக்காது. ஓவியத்தில் ஆண்

தேவதூதர்கள் என்பது கிடையாது. ஒரு வேளை பல ஓவியர்கள் ஏன் பெண் தேவ தூதர்களை வரைகிறார்கள் என்றால் சபையில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகமாக இருப்பதால் கூட இருக்கலாம். ஆனால் எல்லா கருத்துக்களும் தவறானது. ஏனெனில் தேவ தூதர்கள் மனுக்குலத்திலிருந்து வேறுபட்டவர்கள். மனிதன் ஒரு தேவதூதனாக இருந்ததில்லை. அந்த விருப்பமும் கொண்டிருந்ததில்லை. மனிதன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன். அவன் பூமியின் ராஜா என்கிற நிலைமையிலிருந்து விழுந்து, இழிவான உயிரினமானான். தெய்வீக நோக்கமும் வாக்குத்தத்தமும் என்னவென்றால் மேசியா மனுக்குலத்தை ஆளுகை செய்யும் போது, மனுக்குலத்தை பாவத்திலிருந்தும் இழிவான நிலையிலிருந்தும் உயர்த்தி, அவர்களை மீண்டும் மானிட பூரணத்திற்கு கொண்டு வருவார் என்பதே. (அப்போஸ்தலர் 3:19-21)

தேவ தூதர்களைப் போல ஆவியின் ஜீவிகளாக ஆகப்போகிறவர்கள் சபை வகுப்பார் மட்டுமே. அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, உயிர்த்தெழுதலில் மறுரூபம் கொடுக்கப்படுகிறவர்கள். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "நம் அனைவரும் மறுரூபமாக்கப்படுவோம்." ஏனெனில் "மாம்சமும் ரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை." (1 கொரிந்தியர் 15:51, 50) ஆகையால் தனது கர்த்தருடன் மணவாட்டி பங்கு பெறுகிற முதலாம் உயிர்த்தெழுதல் என்பது உலகத்தின் உயிர்த்தெழுதலைக் காட்டிலும் வேறாக இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்களைப் பற்றி நாம் வாசிக்கிறதாவது: "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடு கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 20:6) ராஜ்யத்தில் மாம்சமும் இரத்தமும் பங்கு பெற முடியாது. ஆகையால் அவர்கள் அனைவரும் மறுரூபமாக்கப்பட வேண்டும். இயேசு ஆவியின் சுபாவத்திலிருந்து மானிட சுபாவத்திற்கு மாற்றப்பட முடியாது. ஆனால் சபையானது மாம்சீக சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்பட வேண்டும். ஏனெனில் "அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்பார்கள்." (1 யோவான் 3:2) அவருடைய மணவாட்டியாக இருந்து அவரது மகிமையிலும் பங்கு பெறுவார்கள். சபையானது மறுரூபமாக்கப்படும் போது ஆண், பெண்ணின் தனித்தன்மைகள் அழிக்கப்பட்டு, ஆவியின் ஜீவிகளுக்கிடையே ஆண் என்றும் பெண் என்றும் இருக்கமாட்டார்கள். மகிமையடைந்த சபையில் இப்படி இருக்கமாட்டார்கள் என்று வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. ஆவியின் ஜீவிகளின் பூரணம் ஒரே மாதிரி இருக்கும். எல்லோரும் ஒரே மாதிரி (இனக்கவர்ச்சி இல்லாமல்) பாகுபாடு இல்லாமல் இருப்பார்கள்.

மனுக்குலத்தை பொருத்தவரை : மனுக்குலம் பரிபூரணம் அடையும் போது (இனக்கவர்ச்சி இல்லாமல்) பாகுபாடு இல்லாமல் இருப்பார்கள் என்று வேதவாக்கியங்கள் தெளிவாக குறிப்பிடுவதாக நாம் நினைக்கிறோம். சொல்லப்போனால் ஆயிரம் வருட யுக முடிவில் அனைவரும் படிப்படியாக பூரணமடைவார்கள். அவர்களது அபிவிருத்தியில் ஒவ்வொரு பால் இன விருப்பமும் நீக்கப்பட்டு, மற்ற பால் இன குணங்கள் சேர்க்கப்படும். அந்த யுகத்தில் ஸ்திரீகளின் குணலட்சணத்துடன் ஆண்களின் குணலட்சண கிருபைகளும் சேர்க்கப்படும். ஆண்களின் குணலட்சண கிருபைகளுடன் பெண்களின் சரீரம் மற்றும் சிந்தைகளின் குணலட்சணத்தை எடுத்துக்கொள்ளுவார்கள். இப்படியாக புருஷன் (ஆண்) ஆதியிலே அவனிலிருந்து எடுக்கப்பட்ட விலா எலும்பை பெற்றுக்கொள்ளுவான். எல்லாரும் பூரணத்தைப் பெறுவார்கள். அங்கே பெண் கொள்வதுமில்லை, பெண் கொடுப்பதுமில்லை. இந்த விஷயத்தில் அவர்கள் எல்லோரும் "தூதர்களைப் போல இருப்பார்கள்." (லூக்கா. 20:34-36)

## அதே வேதாகம கருத்தையே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்

**கேள்வி :** காவற்கோபுரம், ஏப்ரல் 1,1911, பக்கம் 102, பத்தி 2, பாரா 2 மற்றும் 3 இல் கொடுக்கப்பட்ட குறிப்பிலிருந்து, சபையின் "மறுரூபத்தைப்" பொறுத்தவரை உங்கள் கருத்து மாற்றம் அடைந்திருக்கிறது என்று நாங்கள் புரிந்து கொள்ளலாமா?

**பதில் :** இல்லை ; அதிலிருந்து நாங்கள் மாறுபடவில்லை. "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்று எழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழித்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" என்கிற அறிக்கை குறிப்பிடுகிற காலம் 1878 என்பதை நாங்கள் இன்னும் நம்புகிறோம். (வெளிப்படுத்தல் 14:13)

நாம் அனைவரும் மரிக்க வேண்டும். ஆனால் "நாம் அனைவரும் நித்திரை அடையமாட்டோம்." கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தில் நித்திரை அடைய வேண்டிய அவசியம் இராது. மரிக்கிற அந்த கணமே உயிர்த்தெழுலும் இருக்கும். (சங்கீதம் 82:7; 1 கொரிந்தியர் 15:51, 52)

## கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

**கேள்வி :** எப்பொழுது சபையானது கிறிஸ்துவின் சரீரமாக ஆகும்?

**பதில் :** சபையானது வேதத்தின் இரு நிலைப்பாடுகளில் பார்க்கப்படலாம்.

(1) மகிமையில் இருக்கும் சபையானது பிரத்தியேகமாக இரட்சகர் மற்றும் அவரது உடன்சுதந்தரராகிய அவரது மணவாட்டி வகுப்பாரையும் அடங்கியதாக இருக்கிறது. இன்னொரு அடையாளத்தில் தலையாகிய இயேசுவும் அவரது சரீரமாகிய சபையும் (கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்கள்) ஆக இருக்கிறது. இவர்கள் மட்டுமே, "முதலாம் உயிர்த்தெழுதலில்" பங்கு பெறுவார்கள்; இவர்கள் மட்டும் கிறிஸ்துவுடன் ஆயிரம் வருடம் ஆளுகை செய்வார்கள்.

(2) தற்காலத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாக பேசப்படுகிற சபையானது அவரது துணையாக உருவாகும் நிலையில், அபிவிருத்தி அடையும் நிலையில் இருக்கிறது. கிறிஸ்து புண்ணியத்தில் நம்பிக்கை வைத்து, கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணம் செய்யும் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படும் போது கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கமாக கருதப்படுகிறான். ஒரு அங்கமாக அவன் கிருபையிலும் அறிவிலும் மற்றும் அன்பிலும் வளர வேண்டும். மாம்சத்தின் முந்தைய காரியங்களை நீக்கிவிட்டு, பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் கனிகளையும் அணிந்து கொள்ள வேண்டும். எனினும் இவர்கள் மூன்று வெவ்வேறு வகுப்பாராக அபிவிருத்தி அடைகிறார்கள்:-

(A) ஒரு "சிறுமந்தை" ஒரு ராஜரீக ஆசாரியக் கூட்டம் அவர்கள் பிரத்தியேகமாக, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதின் மூலம் கிறிஸ்துவின் சரீரமாக ஆகிறார்கள்.

(B) ஒரு "திரள் கூட்டம்" வகுப்பார், இவர்கள் தேவனுக்கு உண்மையாகவும் கடைசிவரை விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், பலி கொடுக்கும் ஆசாரியர் என்று கருதப்படுகிற அளவுக்கு போதுமான வைராக்கியம்

இல்லாதவர்கள். "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாக" கருதப்பட அபாத்திரராக இருக்கிறார்கள். கடைசியில் அவர்கள் ஜெயங்கொண்டவர்களாக ஆவிக்குரிய ஜீவியின் தளத்தைப் பெறுவார்கள். இதற்காகவே அவர்கள் அர்ப்பணம் செய்த போது ஜெனிப்பிக்கப்பட்டார்கள். அவர்கள் கற்புள்ள கன்னிகைகள் வகுப்பாராக இருப்பார்கள்.

(C)மூன்றாவது வகுப்பு - விசுவாச துரோகம் என்றும் அவர்களை பரிசுத்தப்படுத்தின உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று கருதுகிறவர்கள் என்றும் பரிசுத்த பவுல் விவரிக்கிறார். அவர்கள், நீதிமானாக்குதல் மூலம் பரிசுத்தப்படுத்துகிற கிருபையையும் சலுகையையும் வெறுக்கிறவர்கள். பரிசுத்த பேதுரு கூட "அவர்களை கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது" என்று கூறுகிறார். அவர்கள் ஆவிக்குரிய நம்பிக்கைகளிலிருந்து பூமிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு திரும்புகிறார்கள். கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஒரு காலத்தில் கருதப்பட்டவர்கள் புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள்.

## பாவத்திற்கான காணிக்கைகளும் பலிகளும்

**கேள்வி :** நமது கர்த்தர் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்த நியமிக்கப்பட்டார் என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகள் எதை குறிக்கிறது?

**பதில் :** ஆயிரம் வருட யுகத்தில் உலக மனுக்குலமானது தங்களை காணிக்கையாக கொடுக்க, பலியாக அல்ல, சலுகை பெறுவார்கள் என்பது வேத வாக்கியங்களிலிருந்து நிரூபணமாகிறது. ஆகையால் ஆயிரம் வருட யுகத்தில் மாபெரும் பிரதான ஆசாரியர் இந்த காணிக்கைகளை பெற்று, மெல்கிசேதேக்கின் முறையின்படி, தம்முடைய சொந்த புண்ணியம் மற்றும் உரிமையினால் தேவனுக்கு பிரியமானதாக மாற்றுகிறார். எனினும் இந்த வசனத்தை தற்காலத்திற்கு உபயோகிக்கலாம். அப்போஸ்தலர் காணிக்கைகள் என்ற வார்த்தையை முதலில் வைக்கிறார். ஆகையால் பிரதான ஆசாரியன் காணிக்கைகளை இப்பொழுது படைப்பது ஏதோ ஒரு வழியில் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். நமது கர்த்தர் தமது ஜீவனை அர்ப்பணிப்பது அவரது பங்கில் நிச்சயமாக ஒரு காணிக்கையாக இருந்தது. பிதாவானவர் அந்த காணிக்கையை ஏற்றுக்கொண்டு, இறுதியில் நமது கர்த்தரின் காணிக்கையை மற்றவர்களின் பாவத்திற்கான பலியாக அமைய அனுமதித்தார். இதே போல சுவிசேஷ யுகம் முழுவதும் சகோதரர்கள் தங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க தங்களை தேவனிடம் கொடுக்க அழைக்கப்படுகிறார்கள். (ரோமர் 12:1,2)

இப்படியாக நம்மை தேவனிடம் அர்ப்பணிக்கும் போது நாம் ஒரு பாவ நிவாரண பலியை தேவனுக்கு கொடுப்பதில்லை; ஏனெனில் அது நம்மால் இயலாது. ஏனெனில் நமது காணிக்கையை ஏற்றுக்கொள்ளுகிற தெய்வீக ஏற்பாடு, என்னவென்றால், ஒவ்வொரு காணிக்கையும் கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பிறகு பிற்பகுதியில் அதே தெய்வீக ஏற்பாட்டின் மூலம்,பிரதான ஆசாரியர் உலகத்திற்கு கொடுக்கக்கூடிய பாவ நிவாரண பலியாக அமைகிறது. இப்படியாக பிரதான ஆசாரியர் இறுதியில் அந்த காணிக்கையை உலகத்திற்கு பாவ நிவாரண பலியாக ஆக்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: நிழலான பிரதான ஆசாரியரின் ஊழியத்தில் ஒரே மாதிரியான வழக்கம் என்னவென்றால் அவர்கள் காணிக்கையையும் பலிகளையும் தேவனுக்கு கொடுக்க வேண்டும். மேலும் அவர், இயேசு, அந்த ஆசாரியர்களின் மெய்யான ஆசாரியர் பலியாக கொடுக்க எதையாவது பெற்றிருக்க வேண்டும். அவரும்கூட அவருடைய ஆசாரியத்துவத்தை நிறைவேற்ற காணிக்கைகளையும் பலிகளையும் கொடுக்க வேண்டும். தம்மை அவர் மாசற்றவராக தேவனிடம் ஒப்புக்கொடுத்தார். அந்த அர்ப்பணத்தின் காரணமாக அவர் தேவனுக்கு பாவ நிவாரண பலியாக இருக்கிறார். அவரது புண்ணியத்தின் மூலமாக, தாங்களாகவே தங்களை தேவனிடம் அர்ப்பணிக்கிற அவரது சபைக்கும் இதை உண்மையாக ஆக்குகிறார்.

## மீட்கும் பொருளின் புண்ணியம் எப்படி உபயோகிக்கப்படுகிறது

**கேள்வி :** மீட்கும் பொருளுக்கு ஒத்திருக்கிற பாவ நிவாரண நாளின் பலிகளுடன் ஏதாவது இணைந்திருக்கிறதா? அப்படியானால் என்ன இணைந்திருக்கிறது?

**பதில் :** மீட்கும் பொருள் என்ற வார்த்தை மீட்கும் பொருளின் விலைக்கிரயம், சரிசமமான விலைக்கிரயம் என்று சரியாக சொல்லப்படும். பாவ நிவாரண நாளில் மீட்கும் பொருளின் விலைக்கிரயத்துக்கு நிழலான காரியம் எதுவும் நமக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் குறிப்பாக அந்த மீட்கும் பொருளின் விலைக்கிரயம் எப்படி பொருந்தும் வகையில் செய்யப்படும் என்பது காண்பிக்கப்படும். இந்த பாவ நிவாரண நாளின் நிழலை ஆராய்ந்தால், காளையை கொல்லுவதில் எது மீட்கும் பொருளை குறிக்கிறது என்பதை நாம் காண்போம். எல்லா காரியமும் காளையை கொல்லுவதில் சார்ந்திருக்கிறது. ஆடானது முதலாவது கொல்லப்படக்கூடாது. ஆட்டிற்கு எதையும் செய்வதற்கு முன்பாக காளையானது முதலில் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தெளிக்கப்பட வேண்டும். கர்த்தரின் ஆட்டிற்கு மட்டுமல்ல, போக்காட்டிற்கும் செய்யப்பட்ட அனைத்தும் காளையின் மரணத்தை அடிப்படையாகக் கொண்டே இருந்தது. பாவ நிவாரண நாளின் பலிகளில் மீட்கும் பொருளின் விலைக்கிரயத்துக்கு ஒத்திருக்கக்கூடியதை நாம் கவனித்தால் ஆட்டின் மரணம் அவசியமில்லை என்பதையும், ஆனால் அனைத்தும் காளையை சார்ந்தே இருக்கிறது என்பதையும் நாம் காண்போம்.

---

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ.**C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,

எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.

கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com

Website : www.thestudiesinthescriptures. com

**FOR PRIVATE CIRCULATION ONLY**